# වාර්ෂික වාර්තාව

# ஆண்டு அறிக்கை

# ANNUAL REPORT

# 2011

ජාතික ගමනාගමන කොමිෂන් සභාව
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
National Transport Commission

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)**


**முகவரி**

241,

பூங்கா வீதி,

கொழும்பு-05

**வெப் தளம்**

www.ntc.gov.lk

**மின்னஞ்சல்**

info@ntc.gov.lk

**துரித அழைப்பு**

1955

கௌரவ தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர்,

தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு,

இல-34 நாராஹேன்பிட வீதி

நாவல

**ஆண்டறிக்கை-2011**

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச்சட்டத்தின் 1.4(2) பிரிவின் நியதிகள் படியும் நல்ல ஆளுமைக்கான அரசாங்கத்தொழில் முயற்சிக்களின் வழிகாட்டல்களின் அத்தியாங்கள் 05 மற்றும் 06ன் படியும் தேசிய பேர்க்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை செயன்முறை மதிப்பீட்டு அறிக்கை நிதிக்கூற்று மற்றும் 2011 டிசம்பர் 31ம் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையையும் இத்துடன் சமர்ப்பிப்பதில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கௌரவமடைகின்றது.

ரொஷான் குணவர்தன

தலைவர்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் | 01 |
| தலைவரின் செய்தி | 02 |
| பகுப்பாய்வு | 04 |
| செயலாற்றுகை | 06 |
| வருடாந்த கணக்குகள் | 26 |
| கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 36 |

## ஆணைக்குழு அங்கத்தவர்கள்

<u>2011 ஜனவரி தொடக்கம் 2011 ஆகஸ்து வரை</u>

1. திரு சஷி வெல்கம -தலைவர்
2. திரு. கே. புத்ததாச (செயற்படு பணிப்பாளர்) -உறுப்பினர்
3. திருமதி டீ.ஏ. ரணவன - உறுப்பினர்
   (தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு) பதவிவழி
4. திருமதி சேபாலி ரூப்பசிங்க -உறுப்பினர்
   (நிதித் திட்டமிடல் அமைச்சு) பதவிவழி
5. திருமதி டப்ளியூ. ஜீ. சந்திரிக்கா - உறுப்பினர்
   (நிதித் திட்டமிடல் அமைச்சு) பதவிவழி
6. திருமதி யூ.எல். ஜயந்தி டி சில்வா -உறுப்பினர்
7. திரு. கே.டீ.கே. திலக்கரத்ன உறுப்பினர்

<u>2011 செப்தெம்பர் தொடக்கம் 2011 திசெம்பர் வரை</u>

1. திரு சஷி வெல்கம -தலைவர்
2. திரு. கே. புத்ததாச (செயற்படு பணிப்பாளர்) -உறுப்பினர்
3. திரு. ஏ. பொடிராலஹாமி - உறுப்பினர்
   ய. (தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு) பதவிவழி
4. திருமதி சேபாலி ரூப்பசிங்க -உறுப்பினர்
   ய. (நிதித் திட்டமிடல் அமைச்சு) பதவிவழி
5. திருமதி டப்ளியூ. ஜீ. சந்திரிக்கா - உறுப்பினர்
   ய. (நிதித் திட்டமிடல் அமைச்சு) பதவிவழி
6. திருமதி யூ.எல. ஜயந்தி டி சில்வா -உறுப்பினர்
7. திரு. கே.டீ.கே. திலக்கரத்ன உறுப்பினர்

## தலைவரின் செய்தி



பணிப்பாளர் சபையின் சார்பாக 2011ஆம் ஆண்டிற்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகின்றேன். எந்தவொரு நாட்டிலும் அபிவிருத்தி நடைமுறையைப் பொறுத்த மட்டில் போக்குவரத்து மிக முக்கியமான கடமையைச் செய்கின்றது. ஏனெனில் போக்குவரத்துத் துறையிலான அபிவிருத்தி நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பில் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இலங்கையில் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவே ஒருங்கிணைந்த நிறுவனமாக இருப்பதால் அது தனது கடமைகளை ஆற்றுவதில் ஈடுபட்டுள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 1991 இன் 37ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தால் தாபிக்கப்பட்டதுடன், ஆணைக்குழுவின் மிக முக்கியமான கடமைகளாவன வசு சேவைகளின் மூலம் பிரயாணிகள் பயணம் செய்வதற்கான தேசிய கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல், மாகாணங்களுக்கிடையிலான வினைத்திறன் கொண்டதும் பயனுறுதி கொண்டதுமான போக்குவரத்து வலைப்பின்னலைத் தாபித்தல் மற்றும் நாட்டின் போக்குவரத்து தேவைகளை ஒழுங்கமைப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து நவீனமயமாக்கல் என்பனவாகும்.

பரந்த அளவிலான கடமைகளை உள்ளடக்கும் விதத்தில் பல்வேறு அரச நிறுவனங்களிடமிருந்தும் போக்குவரத்து தொடர்பிலான தகவல்களைத் திரட்டி, தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. அதற்கும் மேலாக ஆணைக்குழு பொது மக்கள் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பாக வசுக் கட்டணக் கொள்கைகளைச் சீரமைத்தல், விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட நேர அட்டவணை முறைமை குறித்து இணைந்த சுற்றறிக்கையை செயன்முறைப்படுத்துதல், பூகோள நிலைமையை அடிப்படையாகக் கொண்டு வாகனச் சீராக்கல் முறைமைப் (ஜீ.பீ.எஸ் வலைப்பின்னல்) ஐ.எஸ்.ஓ. 9001-2008இன், படி தர முகாமைத்துவ முறைமையை தயாரித்தல், தன்னியக்க ஆசனப்பதிவு முறைமையை அபிவிருத்தி செய்தல், கிராமப்புறத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வினியோகித்தல் போன்றவையும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் ஆணைக்குழு பாடசாலை மாணவர்களிடையே வீதிப் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயன்முறைப் படுத்துவதடன், போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள், சாரதிகள், நடத்துநர்கள், வசு சொந்தக்காரர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியிலும் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.

தற்போது நீண்டதூர வசுப்பயணிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை நிறுவுவதற்கான செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் இடம்பெறுவதுடன், பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளை (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட) ஊக்குவிக்கும் நோக்கில் வசு முடிவிடங்களைக் கட்டுவதற்கான செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது.

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் கௌரவ சீ.பீ. இரத்னாயக்கா அவர்களையும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. விக்டர் சமரவீர அவர்களையும் அதன் பதவியணியினர் ஒவ்வொருவரையும் அவர்கள் அளித்து வந்த தொடர்ச்சியான ஒத்துழைப்பிற்கும் எதிர்பார்த்த இலக்குகளை எய்துவதற்கு உதவிய ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் எல்லாத் தனியார் வசு உரிமையாளர்களுக்கும் பொதுமக்கள் அனைவருக்கும் அவர்கள் எமக்குத் தேவையான தகவல்களைத் தெரிவித்து, அதாவது நாட்டிற்கான சிறந்த போக்குவரத்து வலைப்பின்னலைத் தாபிப்பதில் அவர்களின் பங்களிப்பை தந்தமைக்கும் எனது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேவிதமாக எனது அன்பு கலந்த நன்றிகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் செயற்றிட்டங்களுக்கு பொறுப்பாக உள்ள பணிப்பாளர்களுக்கும் பிரிவுத் தலைவர்கள் உட்பட எல்லாப் பதவியணியினருக்கும் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் ஆணைக்குழுவின் இலக்குகளை எய்துவதற்கு தமது சேவையினை மனப்பூர்வமாக வழங்கிய அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

ரொஷான் குணவர்தன

தலைவர்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## எமது நோக்கு...

*நாடு முழுதும் பரவலாகச் சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் இலங்கை வாழ் கூட்டிணைந்த குடிமக்கள் மற்றும் அனைத்து தனிநபரினதும் வேறுபட்ட போக்குவரத்து தேவைகளை வழங்கக் கூடிய, தரமானதும் மலிவானதும் பாதுகாப்பானதுமான ஒன்றிணைந்த போக்குவரத்து முறைமையையும் சேவைகளையும் உறுதிப்படுத்தல்.*

## எமது பணி..

*பயணிகள் போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல் தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.*

### எமது இலக்குகளும் ∴குறிக்கோள்களும்

- தரம் மற்றும் அளவு ஆகிய இரண்டுக்கும் உயர் மட்டத்திலான வசு சேவையின் அபிவிருத்தியை தொடர்தல்
- பயனுறுதி கொண்டதான போக்குவரத்து வலைப்பின்னல் ஒன்றை அபிவிருத்தி செய்தல்
- பொதுமக்கள் தங்களுக்கு மிகவும் பொருத்தமான வசு சேவையைத் தெரிந்து கொள்வதற்கு உதவும் விதத்தில் போக்குவரத்து முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்தல்
- பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள இயக்குநர்களின் நிதானத்தையும் நிலையியற் தன்மையையும் உறுதி செய்தல்
- குறைந்த வருமானம் ஈட்டும் ஆனால் சமூக ரீதியில் அவசியமான கிராமப்புற மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசங்களுக்கான வசு சேவைகளுக்கு நிதி உதவி அளித்தல்
- வசுப் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள் மூலம் ஏற்படுத்தப்படும் சுற்றாடலுக்கான பாதிப்பை தடுப்பதற்கான ஒரு வழிமுறையினைத் திட்டமிட்டு அதனை அபிவிருத்தி செய்தல்
- வசுக்கள் இயக்கும் வேளையில் நேரத்தை ஒழுங்கமைப்பதன் மூலம் வசுக்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்
- வசுக்களை இயக்கும் வேளையில் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்தல்
- மாகாணங்களுக்கிடையில் மற்றும் மாகாணச் சேவையில் ஈடுபடும் வசுச் சேவைகளின் இயக்கமுறைமைகளை ஒருங்கிணைத்தல்
- நாட்டின் மொத்த தொழிலாளர் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்

## ஆணைக்குழுவின் அமைவு

ஆணைக்குழு மூன்று பதவிவழி அங்கத்தவர்களையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தனியார் போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மேலும் ஐந்து அங்கத்தவர்களையும் கொணடுள்ளது. ஆணைக்குழு ஒழுங்குசார் கட்டமைப்புத் தலைவர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் இயக்கத்திட்டமிடல் மற்றும் சேவையைக் கண்காணித்தல், தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்பு, நிதி மற்றும் கொள்ளவனவு செய்தல் என்பவற்றுக்குப் பொறுப்பான நான்கு அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது.

2011ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பணியணி 190 பணியாளர்களைக் கொண்டிருந்தது. ஆனால் நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 147 ஆகும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2011.12.31 அன்றிருந்தவாறான பணியணி

| பணியாளர் தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட பணியணி | சேவையில் ஈடுபடும் பதவியணியினர் |
|---|---|---|
| PL - 1 | 14 | 11 |
| PL - 3 | 13 | 11 |
| MA- 1.1 | 65 | 56 |
| MA- 2.1 | 01 | -- |
| MA- 4 | 57 | 47 |
| MA- 5.3 | 20 | 08 |
| JM - 1.1 | 05 | 03 |
| MM - 1.1 | 10 | 07 |
| HM - 1.1 | 04 | 03 |
| HM- 2.1 | 01 | 01 |
| மொத்தம் | 190 | 147 |

## 2011ஆம் ஆண்டிற்கான செயற்பாடு

### 01 வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்




வீதி விபத்துக்களிலான அதிகரிப்பு நாட்டின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய தாக்கத்தைக் கொண்டிருப்பதுடன் தரவுகளையும் புள்ளி விபரங்களையும் பகுப்பாய்வு செய்யும் வேளையில் மிகப் பெரும் எண்ணிக்கையான வீதி விபத்துக்கள், மோட்டார் வாகனச் சொந்தக்காரர்களினதும் வீதியில் பயணிக்கும் பாதசாரிகளினதும் அசட்டையினாலேயே ஏற்படுவதாகத் தோன்றுகின்றது. இதற்குப் பல சமூகப் பிரச்சினைகளும் காரணிகளாயமைகின்றன. ஒரு நாடு என்ற ரீதியில் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான மிகக் கடினமான நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அரசாங்கம் 2011 – 2021 வரையான தசாப்த காலத்தை வீதிப் பாதுகாப்புக்கான காலமாக 2011ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதியன்று பிரகடனப்படுத்திய அதேவேளை மேதகு சனாதிபதி அவர்கள் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான தேவையை அழுத்திக் கூறியுள்ளார்.



தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒரு அரசாங்க ஒழுங்கமைப்பு நிறுவனம் என்பதால் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வீதியை உபயோகிப்பவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிக முக்கியமான அம்சம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் இனங்கண்டுள்ளதுடன், அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் நன்மைக் கருதி சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோருக்கு வீதிப் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை 2011 யூலையில் நடாத்தியது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2011ஆம் ஆண்டுக் காலத்தின் போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இலங்கைப் போக்குவரத்துச் சபை (இ.போ.ச.) மற்றும் மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகாரிகள் ஆகியோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் 04 செயலமர்வுகள் நடாத்தியதுடன், இ.போ.ச. மற்றும் தனியார் வசு பணியாளர்களுக்கும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வைத்திருப்போருக்கும் சாரதிகள், நடத்துநர்கள்களுக்கும் எதிராகப் பொதுமக்களால் செய்யப்பட்ட முறைபாடுகள் தொடர்பில் அவர்களுக்கும் விழிப்புணர்வை

ஏற்படுத்தும் நோக்குடன், 07 வேலைக்களங்கள் நடாத்தியது. நடப்பாண்டில் இதன் தொடர்பில் 5.5 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. மேலும் வீதி விபத்துக்களைக் குறைக்கும் நோக்கிலும பொது மக்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் வீதி பாதுகாப்புத் தொடர்பிலும் 03 விளம்பரங்களை இலத்திரனியல் தகவல் தொழில் நுட்பத்தினூடாக விளம்பரம் செய்வதற்கென வடிவமைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 02. சமூகத் தேவைகளின் பொருட்டு வசுச் சேவைகள் மட்டிலான பங்களிப்பு

மக்களின் சமூக மற்றும் பொருளாதார தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன், சமூகத் தேவைகளை ஆதாரமாகக் கொண்ட வசு சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. பாடசாலை வசுச் சேவை (சிசு செரிய), கிராமப்புற வசுச் சேவை (கெமி செரிய ) மற்றும் இரவுச் சேவை ( நிசி செரிய) ஆகியன ஆரம்பிக்கப்பட்டு மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை எய்தும் நோக்கில் நிதி உதவியும் அளிக்கப்பட்டது. இந்தச் சேவைகள் அரசம மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளிலிருந்தும் பெறப்பட்ட அதே வேளை வியாபார நோக்கம் இரண்டாவதெனக் கருதி அச்சேவை பிரதானமாக சமூக சேவை என்னும் அடிப்படையில் செயன்முறைப்படுத்தப்பட்டது.

### 2.1 பாடசாலை வசுச் சேவை செயற்றிட்டம் - ‘‘சிசு செரிய’’




உள மற்றும் உடல் ரீதியாக எவ்வித இடைஞ்சலுமின்றி பள்ளிக்கூட பிள்ளைகள் நேரத்துக்கு பாடசாலைக்கு சென்று பாதுகாப்பாக வீடு திரும்புவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இச்செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். இச்செயற்றிட்டத்தின் மற்றுமோர் குறிக் கோளானது, போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், சுற்றாடல் மாசடைவதைக் குறைத்தல், பெற்றோரின் பொருளாதார இடரைத் தணித்தல், மற்றும் பிள்ளைகள் தொடர்பான தொந்தரவுகளைக் குறைத்தல், நம்பகத் தன்மையையும் ஒழுங்கான சேவையையும் வழங்குதல் என்பனவாகும். இச்செயற்றிட்டத்தின் கீழ் உள்ள பாடசாலை வசுக்களில் மாணவர்களிடமிருந்து சாதாரண கட்டணத்தின் 50மூ வீதமே சலுகைக் கட்டணமாக அறவிடப்படுவதுடன், வருவாயில்

வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக முன் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டணங்களிலேயே வசு சேவைகள் செயன்முறைப்படுத்தப்படுகின்றன.

2011ஆம் ஆண்டின் இறுதியில் 900 பாடசாலை வசு சேவைகளை சிசு செரியவில் செயன்முறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டதெனினும், ஆண்டின் இறுதியல் 790 பாடசாலை வசுச் சேவைகளை மட்டுமே வெற்றிகரமாக செயன்முறைப்படுத்த முடிந்தது. இச்செயற்றிட்டம் பாடசாலை அதிகாரிகள், மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் அனைவராலும் வெகுவாகப் பாராட்டவும் புகழவும் படுகின்றது. மீளாய்வு ஆண்டுக் காலத்தின் போது இதன் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 178.7 மில்லியன் ரூபா ஆகும்.

## 2.2 கிராமப்புற மற்றும் இலாபகரமற்ற பாதைகளில் வசுச் சேவைகளை வழங்குவதற்கான செயற்றிட்டம் - "கெமி செரிய"




போக்குவரத்து இல்லாத அபிவிருத்தியடைந்து வரும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு தமது நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய இலாபகரமானது நம்பகத்தன்மை கொண்டதுமான வசுச் சேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இச்செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் 18 கெமி செரிய சேவைகள் செயன்முறைப்படுத்தப்பட்டன. அதாவது வடமத்திய மாகாணத்தல் 05 சேவைகளும் வடமேல் மாகாணத்தில் 03 சேவைகளும் கிழக்கு மாகாணத்தில் 10 சேவைகளும் ஆகும். இதன் தொடர்பில் நடப்பாண்டின் போது செலவிடப்பட்ட தொகை 15. மில்லியன் ரூபாவாகும்.

## 2.3 இரவு வசுச் சேவைச் செயற்றிட்டம் - "நிசி செரிய"




இரவு நேரங்களில் வசுச் சேவை இல்லாததன் காரணத்தால் பிரயாணிகள் எதிர் பொள்ளும் பிரச்சினைகளைத் தவிர்த்து அதாவது இரவு நேரங்களிலும் விடியற் காலையிலும் வசுச் சேவைகள் இல்லாத விடத்து பொது மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதலேஇச்செய்றிட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். இச்சேவைகளைக் கண்காணிப்பதற்கென இரவு நேரங்களிலும் விடியற் காலையிலும் அரசாங்கத்

துறையிலிருந்தும் தனியார் துறையிலிருந்தும் உதவிகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் எண்ணிக்கைக்கான செலவு ரூபா 3.3 மில்லியன்களாகும்.

## 2.4 பாடசாலை மாணவரிடையே துவிச்சக்கர வண்டிகளை வினியோகித்தல்




பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் மற்றுமோர் முயற்சியாக போக்குவரத்து வசதிகளற்ற பிரதேசங்களில் தேசிய ஆணைக்குழுவால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாயிருப்பதுடன், இது பாதுகாப்பானதும் நம்பிக்கையானதும் பொருளாதார ரீதியில் இலாபகரமானதும் சுற்றாடல் நேயமானதுமாகும். இச்செயற்றிட்டம் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத பிரதேசங்களில் வாழும் பாடசாலைப் பிள்ளைகளுக்கான போக்குவரத்து முறையாக அறிமுகஞ் செய்யப்பட்டது.

இந்த ஆண்டின் போது 500 சைக்கிள்கள் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவ மாணவிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த ஆண்டின் போது இதன் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை ரூபா 5 மில்லியன்களாகும்.



# 03. தனியார் வசு சேவைகளை மீளமைத்தல்

## 3.1 வசுக் கம்பனிகளை உருவாக்குதல்

சீர்கெட்டுச் செல்லும் இன்றைய பயணிகள் சேவையைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம் தனி நபர்களால் நடாத்தப்படும் வசுச் சேவைகளை வரையறுக்கப்பட்ட கடன் பொறுப்புக் கம்பனிகளில் பங்குதாரர்களாக்கி அதன் பிரகாரம் வசுச் சேவைகளை ஒழுங்கான, விஞ்ஞான ரீதியிலும் இலாபகரமான அடிப்படையிலும் மேற்கொள்வதற்கு எண்ணியுள்ளது. இந்த மீளமைப்பை வசுச் சேவைகள் தொடர்பாகப் பொருந்தச் செய்வதற்கு ஏதுவாக 1991இன் 37ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டம், 1996இன் 30ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் ஆகிய இரண்டும் திருத்தப்படுகின்றன.

இந்த வசுக் கம்பனிகளைத் தாபிப்பதில் பின்வரும் அம்சங்கள் குறிக்கோள்களாக இனங்காணப்பட்டன.

- வசுச் சொந்தக்காரர்களை ஒன்றிணைத்து இப்பணியினை மேம்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி அதன் மூலம் பொதுமக்களுக்கு பாதுகாப்பானதும் நம்பிக்கையானதும் தரம் வாய்ந்ததுமான சேவைகளை வழங்குதல்.

- போட்டி மனப்பான்மையை தணிப்பதன் மூலம் வீதி விபத்துக்களைக் குறைத்தல்

- தனியார் வசுத் தொழிற்றுறையில் முதலீடு செய்துள்ள முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதன் மூலம் அவர்களை மேலும் முதலீடு செய்வதற்கு ஊக்குவித்தல்

- வசுத்திரிப்பிடங்களில் உள்ள ஒழுங்கீனங்களை ஒழித்தல்

- வசு சாரதிகளின் சேவை நிபந்தனைகளையும் அவர்களின் நலன்புரி நடவடிக்கைகளையும் ஊக்குவித்தல்

- அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான விடயங்களில் கம்பனிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதன் மூலம் பொதுவான தீர்மானமெடுத்தல் மற்றும் நிர்வாகம் என்பனவற்றுக்கு வசதியளித்தல்

- அதிகாரம் அளிக்கப்படாத சேவை, மிகையாகப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லல், வேகமாக வண்டியை ஓட்டுதல், வீதி விபத்துக்கள் அதிகரித்தல் மற்றும் இயக்கும் நேர அட்டவணைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பொதுவான தீர்மானங்களை எடுப்பதற்கு முயற்சித்தல்

2011ஆம் ஆண்டின் முடிவில் 07 கம்பனிகளைப் பதிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், பின்வரும் கம்பனிகள் வெற்றிகரமாக இயக்கப்பட்டன. இதற்கு செலவிடப்பட்ட தொகை ரூபா 1.1 மில்லியனாகும்.

1. வரையறுக்கப்பட்ட வயம்ப கே.ஜீ.என். பிரயாணிகள் போக்குவரத்துக் கம்பனி
2. வரையறுக்கப்பட்ட பதுளை பிரயாணிகள் போக்குவரத்துக் கம்பனி
3. வரையறுக்கப்பட்ட மாத்தறை பிரயாணிகள் போக்குவரத்துக் கம்பனி
4. வரையறுக்கப்பட்ட கதிர்காம பிரயாணிகள் போக்குவரத்துக் கம்பனி
5. வரையறுக்கப்பட்ட அம்பலங்கொடை பிரயாணிகள் போக்குவரத்துக் கம்பனி
6. வரையறுக்கப்பட்ட இரத்தினபுரி பிரயாணிகள் போக்குவரத்துக் கம்பனி
7. வரையறுக்கப்பட்ட குருணாகலை பிரயாணிகள் போக்குவரத்துக் கம்பனி

## 04. தொழில் நுட்பவியல் மட்ட மேம்பாடுகளும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும் வசுச் சேவைகளின் தரத்தை மேம்படுத்தலும்

### 4.1 ஜீ.பீ.எஸ். (உலகலளாவிய ரீதியில் அமைவிடத்தைக் குறிக்கும் முறைமையை அடிப்படையாகக் கொண்ட வாகனத் தடத்தைக் குறிக்கும் ∴கண்டுகொள்ளும் முறைமை)




தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒரு தரமான, பாதுகாப்பான மற்றும் நம்பிக்கையான சேவையைப் பொது மக்களுக்கு வழங்கும் நோக்குடனேயே இதனை ஆரம்பித்தது. மேலும் இச்செயற்றிட்டத்தின் மூலமாக இயக்குவதற்கு ஆகும் செலவினைக் குறைக்க எதிர்பார்க்கப்படுவதுடன், சேவைகளின் வினைத்திறனையும் பிழையற்றதன்மையையும் எடுக்கும் நேரத்தையும் உறுதி செய்ய உதவும். மேலும், இச்செயற்றிட்டம் தொடர்பிலான கொள்கைகளும் நடைமுறைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள அதே வேளை இந்த (உ.அ.மு) ஜீ.பீ.எஸ். முறைமை 150 வசுக்களில் பொருத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டில் சிறந்த ஜீ.பீ.எஸ். முறைமைக்கான கட்டுப்பாட்டு அறையைத் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், மாகாணங்களுக்கிடையிலான எல்லா வசுக்களிலும் இதனை அறிமுகம் செய்து செயன்முறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறையின் ஊடாக பிரயாணிகளிடம் இருந்து கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் சரியான தகவல்களை வழங்கி வசுக்களை ஒழுங்கமைப்பதற்கு இயலும். இதன்

தொடர்பில் இந்த நடப்பாண்டின் போது செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 6.8 மில்லியன்களாகும்.

### 4.2 வசுக்களை பௌதிக ரீதியில் பரிசீலித்தல் மற்றும் பிரயாணிகள் சேவை அனுப்பத்திரம் வழங்குதல்

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள் யாதெனில் பிரயாணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதும் வசு முடிவிடம் வரையும் பிரயாணிகளுக்கு பாதுகாப்பானதும் சௌகரியமானதுமான சேவையை வழங்குவதும் ஆகும். மேலும் ஒலி மட்டத்தையும் பிற நிலைமைகளையும் கண்காணித்தலும் இச்செயற்றிட்டத்தின் கீழ் பொருத்தமான கருவிகளை அறிமுகஞ் செய்வதற்கும் 2013ஆம் ஆண்டின் இறுதியளவில் 1080 பயணப் பாதை பெயர்ப்பலகைகள் மாகாணங்களிடையான பிரயாணிகள் வசுக்களில் பொருத்தப்பட்டுள்ள அதே வேளை, 1600 வசுக்களில் தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சொகுசு வசுக்களில் மற்றும் மிகு சொகுசு வசுக்களிலான தரக்கட்டுப்பாட்டு சோதனைகள் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டுக் காலத்தின் போது இதற்கு செலவிடப்பட்ட தொகை ரூபா 2.1 மில்லியன்களாகும்.




தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கேள்விப் பத்திர நடைமுறையின் கீழ் மாகாணங்களிடையான பிரயாணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது. 2011ஆம் ஆண்டின் இறுதியளவில் 33 வழிப்பாதைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதன் படி 33 வழிப்பாதைகளுக்கான 47 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 4.3 தொலைபேசி மூலம் ஆசனங்களை ஒதுக்கிக் கொள்ளுதல்

செல்லிடத் தொலைபேசி வழியாக மாகாணங்களுக்கு இடையிலான பிரயாணிகள் ஆசனங்களை ஒதுக்கிக்கொள்ளுதல் 2011 யூலையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தொடர்பிலான முன்னோடிக் நிகழ்ச்சித் திட்டம் 18 மாகாணங்களிடையான செல்வழிப் பாதையில் அறிமுகம் செய்யப்பட்டதுடன், இம்முன்னோடிக் நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து எதிர்வரும் காலத்திற்கான திட்டங்கள் வடிவமைக்கப்படும்.

### 4.4 பஸ்ரியன் மாவத்தை வசு முடிவிட அபிவிருத்தி

2011 ஆம் ஆண்டுக் காலத்தின் போது பஸ்ரியன் மாவத்தை முடிவிடத்தை மேம்படுத்தும் நோக்கில் பின்வரும் நிறுவனங்களுடன் நான்கு (4) சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

- தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
- தேசிய போக்குவரத்துச் ஆணைக்குழு
- போக்குவரத்துச் அமைச்சு
- இலங்கைப் போக்குவரத்துச் சபை
- புகையிரதத் திணைக்களம்
- கொழும்பு மாநார சபை
- வீதி அபிவிருத்தி அதிகார சபை
- அரசாங்க எந்திரவியல் கூட்டுத்தாபனம்
- நகர அபிவிருத்தி அதிகார சபை
- மேல் மாகாண வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபை
- மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

இக்கலந்துரையாடலுக்கான முக்கிய குறிக்கோள் தற்போது 12 ஏக்கர் காணியில் 6 ஏக்கர் காணி நெடுகிலும் கடைகளுடன், மெனிங் சந்தைக்கு ஒதுக்கப்பட்ட 6 ஏக்கர் காணியையும் இணைத்து, குணசிங்கபுரத்தில் அமைந்துள்ள இன்றைய வசுத் தரிப்பிடம், இலங்கைப் போக்குவரத்துச் சபை வசு நிலையம், மற்றும் பஸ்ரியன் மாவத்தையில் இன்றுள்ள வசு முடிவிடத்தையும் உத்தேச வசு முடிவிடத்துடன் இணைப்பதுமாகும். மெனிங் சந்தை அமைந்துள்ள இடத்துக்கு ஒரு மாற்று இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையில் நகர அபிவிருத்தி அதிகார சபை ஈடுபடுகின்றது.

### 4.5 வவுனியா முடிவிடம்



அரசாங்கப் போக்குவரத்து வலைப்பின்னலுக்குச் சிறந்த உடகட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன், வவுனியாவில் மாகாணங்களுகிடையிலேயான வசு முடிவிடம் ஒன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென வவுனியா அரசாங்க அதிபரூடாக குறுந்தவணைக் குத்தகை அடிப்படையில் கமத் தொழிற் திணைக்களத்திடமிருந்து (ஆராய்ச்சி) ஒரு காணித் துண்டு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. காணி அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதுடன், மண் போட்டு நிரப்புதல் உட்பட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ரூபா 14.3 மில்லியன் செலவிடப்பட வேண்டியதாயிற்று.

### 4.6 ஊழியர் பயிற்சியும் அபிவிருத்தியும்

மீளாய்வு ஆண்டுக் காலத்தின் போது போக்குவரத்துத் திட்டமிடலைச் சேர்ந்த பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற்கான ஒழுங்குகளை ஆணைக்குழு செய்ததுடன், மொழித் தேர்ச்சி, பொது முகாமைத்துவம், மனித வளங்கள் முகாமைத்துவம், தொடர்பாடல் ஆற்றல்களின் கொள்ளல் அபிவிருத்தி, தொழில் சார் கடிதங்கள் எழுதுதல், நுகர்வோர் வரவேற்பு, உலகளாவிய ரீதியில் அமைவிடத்தைக் குறிக்கும் முறைமையினை (ஜீ.பீ.எஸ்) அடிப்படையாகக் கொண்ட தகவல் தொடர்பாடல் முறைமையிலான பயிற்சி, போக்குவரத்து நெரிசலைச் சமாளிப்பதற்கான உபாயங்கள், பயிலுனர்களைப் பயிற்றுவித்தல், வீதிப் பாதுகாப்பு, பெற்றோல் எரிபொருள் முறைமை மற்றும் பொதுவான புகையிரத டீசல் எரிபொருள் முறைமை பற்றிய அனைத்திலும் பயிற்சிகளை வழங்கியது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பல்கலைக்கழகங்களிலிருந்தும் நன்கு தேர்ச்சிப்பெற்ற நிறுவனங்களிலிருந்தும் வளவாய்ப்புகளைக் கொண்ட ஆளணியினரின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் பல்வேறு புலமைப் பரிசிற் திட்டங்களின் கீழ் போக்குவரத்து நடவடிக்கைகளில் பயிற்சி பெறுவதற்கென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பதவியணியினர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். மீளாய்வு ஆண்டுக் காலத்தின் போது 44 உத்தியோகத்தர்களுக்கு உள்ளூர்ப் பயிற்சி அளிக்கப்பட்ட அதே வேளை 10 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை 54 ஆகும். நடப்பாண்டின் போது உள்ளூர்ப் பயிற்சித் திட்டங்களுக்கென ரூபா 0.72 மில்லியன்களும் வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்கென ரூபா 1.1 மில்லியன்களும் செலவு செய்யப்பட்டன.

### 4.7 வசு சிப்பந்திகளைப் பதிவு செய்தலும் பயிற்றுவித்தலும்

மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள சாரதிகளுக்கும் நடத்துனர்களுக்கும் அவர்களின் சேவை நிலைமைகளையும் ஒழுக்க மட்டங்களையும் மேம்படுத்துவதற்கென விசேட பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன், அவர்களுக்கான ஆளடையாள அட்டையும் வழங்கப்பட்டன. 2011ஆம் ஆண்டுக் காலத்தின் போது வடமாகாணத்தில் தமிழ் மொழி மூலமான சாரதிகளுக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டதுடன், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்ட அதே வேளை 171 சாரதிகளும் 164 நடத்துனர்களும் பயிற்சி பெற்றனர். மேலும் இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கெனத் தமிழ்மொழி மூலமான போதனாசிரியர்களைத் தெரிவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டுக் காலத்தின் போது வசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் காரணமாக அடைந்த முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. இதன் தொடர்பில் இந்த ஆண்டு காலத்தின் போது செலவிடப்பட்ட தொகை ரூபா 5.5 மில்லியன்களாகும்.

| வசு சிப்பந்திகள் பயிற்சி நிகழ்ச்சித்தட்ட முன்னேற்றம் - 2011 | | | | |
|---|---|---|---|---|
| பயிற்சி நிலையம் | 2011 பயிற்றப்பட்ட வசு சிப்பந்திகள் எண்ணிக்கை | | 2011 நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | |
| | சாரதிகள் | நடத்துனர்கள் | சாரதிகள் | நடத்துனர்கள |
| குருணாகலை | 344 | 370 | 09 | 10 |
| அநுராதபுரம் | 174 | 156 | 04 | 04 |
| மொறட்டுவை | 258 | 307 | 07 | 08 |
| காலி | 126 | 108 | 03 | 03 |
| அம்பாந்தோட்டை | 134 | 113 | 03 | 03 |
| வவுனியா | 14 | 32 | 01 | 01 |
| கண்டி | 122 | 160 | 03 | 04 |
| யாழ்ப்பாணம் | 157 | 132 | 03 | 03 |
| **2011 ஆம் ஆண்டுக்கான மொத்தம்** | **1329** | **1378** | **33** | **36** |
| **2008-2011 வரை மொத்த பெறுமானம்ஃவை** | **5548** | **6437** | **149** | **163** |

**மூலம் - தரப் பாதுகாப்பு மற்றும் வெளிவாரித் தொடர்புகள் திணைக்களம்**

## 4.8 ஆய்வுகள்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கொள்கைகளை ஒழுங்கமைப்பதற்கு வேண்டிய தரவுகளை வழங்குவதும் தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் தேவையான தகவல்களையும் வழங்குவதுமே ஆய்வின் பிரதான நோக்கமாகும். மேலும், வசுப் போக்குவரத்தை உபயோகிக்கும் பிரயாணிகள் மற்றும் வசு இயக்குனர்கள் தொடர்பாக அவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்வதே தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதான கடமையாகும். அத்துடன், போக்குவரத்துத் துறையில் ஏற்படும் கேள்விக்கேற்ற வழங்கல் இருக்கவேண்டியது முக்கியமானதொரு விடயமாகும்.

இப்பிரிவு மாகாணங்களுக்கிடையே வசுச் சேவைகள் தொடர்பிலான நேர அட்டவணைகள் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற விதத்தில் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் தொடர்பாக 2011 ஆம் ஆண்டுக்காலத்தின் போது 35 ஆய்வுகளை நடாத்தியுள்ளது. அது குறித்த தகவல்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டுக் காலத்தின் போது ஆய்வுகளுக்காகச் செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 0.6 மில்லியன்களாகும்.




மூலம்- திட்டமிடல் பிரிவு, தேபோஆ

### 4.9 வசுக்கட்டணங்கள் தொடர்பான முரண்பாடுகளை நீக்குதல்

இத்திட்டம் 2002ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட வசுக்கட்டணங்கள் தொடர்பிலான சிபாரிசுகளின் விளைவாக செயன்முறைப்படுத்தப்பட்டது. கொள்கையின் படி இன்று நிலவும் வசுக் கட்டண அட்டவணையிலிருந்து முரண்பாடுகளை அகற்றுவதற்கான சிபாரிசு கிடைத்துள்ளது. வசுப் பிரயாணப் பாதைகள் எல்லாவற்றையும் அளந்து வசுக் கட்டணக் கொள்கை சிபாரிசுகளுக்கு அமைய எல்லா பாதைகளுக்குமான வசுக் கட்டணங்களைத் தீர்மானிப்பது இத்திட்டத்தின் பிரதான பொறுப்பாகும். 2011ஆம் ஆண்டில் வடமேல் மாகாணத்தின் வசுக் கட்டணங்களில் நிலவிய முரண்பாடுகள் அகற்றப்பட்டு தரப்படுத்தப்பட்ட கட்டணங்கள் கொண்ட அட்டவணைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டின் இறுதியளவில் இத்திட்டம் தொடர்பான விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டின் போது செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 3 மில்லியனாகும். எதிர்வரும் ஆண்டில் கிழக்கு மற்றும் சப்ரகமுவா மாகாணங்களில் நிலவும் முரண்பாடுகளை நீக்கும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>வசுக்கட்டண முரண்பாடுகளை நீக்குதல்</u>**

| පළාතමாகாணம் / மாணங்களுக்கிடையேඅන්තර් පළාත් | ගමන්பயணப்பாதை எண்ணிக்கை මාර්ග සංඛ්‍යාව |
|---|---|
| மத்திய | 580 |
| வடமேல் | 365 |
| தென் | 390 |
| மேல் | 780 |
| | |
| தேபோஆ (மாகாணங்களுக்கடையே) | 400 |
| | |

மூலம்- திட்டமிடல் பிரிவு, தேபோஆ

## 4.10 நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தியமைத்தல்




மூலம் - இயக்குதல் மற்றும் சேவை கண்காணிக்கும் பிரிவு, தேபோஆ

இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோள் அரசாங்க பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையை நம்பகமான, பாதுகாப்பான மற்றும் சௌகரியமான அரச போக்குவரத்துச் சேவையாக பிரயாணிகளுக்கு வழங்குவதுடன், நேர அட்டவணைகளை ஒழுங்கமைப்பதன் மூலம் வசுக்களை இயக்குபவர்கள் எல்லோருக்கும் சந்தர்ப்பங்களை வழங்குவதுடன், அதன் வழியாக வசு இயக்குனர்களின் வர்த்தக நிலைமையைப் பாதுகாத்தல் என்பனவாகும். இதற்கும் மேலாக இக்கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் ஏனைய குறிக்கோள்களுள் அரசாங்க மற்றும் தனியார் வசு இயக்குனர்களிடையே நிலவும் சினேகத்தமையற்ற போட்டியைத் தணிக்கும் அதே வேளை நாள் ஒன்றுக்கு இயக்கப்படும் சராசரி கிலோமீற்றரின்

எண்ணிக்கையை அதியுயர் அளவுக்கு அதிகரிப்பதாகும். இதன்படி 2011ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட சுற்று அட்டவணைகள் 145 ஆகும்.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த ஆண்டின் இறுதிவரை மாகாணங்களுக்கிடையே வசு சேவைகளுக்கான 240 சுற்று நேர அட்டவணைகள் ஒழுங்கமைக்கப்பட்டதுடன், இக்காலப்பகுதியில் பிரயாணிகளின் கோரிக்கைகளுக்கு அமைவாக 152 நேர அட்டவணைகள் திருத்தப்பட்டு மீண்டும் செயற்படுத்தப்பட்டன. அடுத்த ஆண்டுக் காலத்தின் போது மாகாணங்களுக்கிடையிலான வழிப்பாதை நிலப்படம், பஸ்ரியன் மாவத்தை வசு முடிவிடத்தில் நேர அட்டவணைகளைப் பார்வைக்கு விடுவதற்கான ஒரு ஒழுங்கு முறைமையை ஒழுங்கமைத்தல் மற்றும் வசுக்கள் இயங்கும் நேர அட்டவணைகளைத் திருத்துதல் மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளின் நேர அட்டவணைகளைத் தயாரித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பிலான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பில் இந்த ஆண்டில் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 2.5 மில்லியன்களாகும்.

### 4.11 நடமாடும் சோதனைகள்

நடமாடும் சோதனைப் பிரிவின் கடமைகள் மாகாணங்களுக்கிடையே பிரயாணிகள் சேவையின் இயக்க நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் விரிவாக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் நடமாடும் சோதனைப் பிரிவால் திடீர் சோதனைகள், பிரயாணிகள் அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் செயற்படும் மாகாணங்களுக்கிடையிலான வசுக்களைக் கண்டுபிடிப்பதற்கென நடாத்தப்பட்டதுடன், அவ்வகையான சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

நடமாடும் சோதனைப் பிரிவு 2011ஆம் ஆண்டின் இறுதியளவில் 15662 வசுக்களில் சோதனை நடாத்திய அதேவேளை 5978 மணித்தியாலங்கள் குழுச் சேவைக்காகச் செலவிடப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திரங்கள் இல்லாது இயக்கப்பட்ட 381 மாகாணங்களுக்கிடையேயான வசுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், சட்ட நடவடிக்கைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இப்பரிசோதனை நடவடிக்கைகள் போக்குவரத்து பொலிஸ் தலைமையகத்தின் உதவியுடன் நடாத்தப்பட்டன.

**<u>2011ஆம் ஆண்டின் போது அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியதாக அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்</u>**




மூலம் - தரப் பாதுகாப்பு மற்றும் வெளிவாரித் தொடர்புகள் திணைக்களம்

1. சிறு குற்றங்கள்
2. பதிவு செய்யப்படாத சாரதிகளையும் நடத்துனர்களையும் பணியில் அமர்த்துதல்
3. ஒழுங்கில்லாத அல்லது பொறிமுறை சாரா பயணச்சீட்டுக்கள்
4. தொடர்புடைய ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழையாமை
5. வழிப்பாதைக்குப் பொருத்தமில்லாத ∴செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமின்றி இயக்குதல்
6. சொகுசு வசுக்களில் அளவுக்கதிக எண்ணிக்கை கொண்ட பிரயாணிகளை ஏற்றுதல்
7. வசுக்களில் அவசியமான ஆவணங்களைக் கொண்டு செல்லத் தவறுதல்
8. சென்றடையும் இடத்தைக் குறிக்கும் பொருத்தமான பெயர்ப் பலகையை காட்சிப்படுத்தாது இருத்தல்
9. பிரயாணிகளுக்கு பிரயாணச் சீட்டுக்களை வழங்கத் தவறுதல்
10. குறிப்பிட்ட கட்டணத்தை விட அதிகரித்த அளவிலான கட்டணத்தை அறவிடுதல்
11. பிற குற்றச் செயல்கள்

## 4.12 பொதுமக்களின் முறைப்பாடுகள்




மூலம் - தரப் பாதுகாப்பு மற்றும் வெளிவாரித் தொடர்புகள் திணைக்களம்

மாகாணங்களுக்கிடையிலான வசு சேவையினைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு உயர்ந்த, தரமிக்க, ஒழுங்கான சேவையை வழங்கும் நோக்கில் மக்கள் முறைப்பாட்டுப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. இது நாள் முழுதும் 24 மணித்தியாலங்களும் பிரயாணிகள் தமது முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு முடியுமான வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு குறி இலக்கத்துடன் பிரயாணிகள் பின்வரும் 2 தொலைபேசி இலக்கங்கள், 2 பாக்ஸ் இலக்கங்கள் மற்றும் மின் அஞ்சல் மூலமாகத் தேசிய ஆணைக்குழுவுக்குத் தெரிவித்துக் கொள்ளலாம். பிரயாணிகள் ஆணைக்குழுவின் காரியாலயத்திற்கு நேரடியாக வருகைத் தந்தும் முறைப்பாடுகளைச் செய்து கொள்ளலாம். பொது மக்கள் முறைப்பாட்டுப் பிரிவு, பொது மக்கள் செய்யும் முறைப்பாடுகளைப் பெற்று முறைப்பாடுகள் தொடர்பிலான பதிவுகளைப் பேணுவதுடன், அம்முறைப்பாடுகள் தொடர்பில் புலன் விசாரணை நடாத்த வேண்டியதுடன், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன், தலைவராலும் பணிப்பாளர் அதிபதியாலும் பணிக்கப்படும் இயக்கக் கடமைகளைக் கவனிக்கின்றது. மாகாணங்களுக்கிடையேயான சேவைகள் தொடர்பிலான முறைப்பாடுகள் தொடர்பாக ஆணைக்குழுவின் அலுவலகத்திலேயே புலன் விசாரணைகளை நடாத்துவதற்கான ஒழுங்குகளை ஆணைக்குழு செய்திருப்பதுடன், மாகாணச் சேவைகள் தொடர்பிலான முறைப்பாடுகள் அந்தந்த மகாணங்களின் அதிகார சபைகளுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இ.போ.ச. தொடர்பிலான முறைப்பாடுகள் இ.போ.ச. தலைவருக்குச் செய்யப்படல் வேண்டும். மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5398 ஆகும். 88மூ ஆனவை அதாவது 4725 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

### 4.13 ISO 9001:2008 தர முகாமைத்துவ முறைமை

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு ஐளுழு 9001:2008 ஐப் பெற்றுக் கொள்வதற்கான எதிர்பார்ப்புடன், பொருத்தமான ஆலோசகர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு தர முகாமைத்துவ அதிகாரம் பெற்ற ஆவணங்களைத் தயாரிப்பதற்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இது நான்கு கட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கட்டம் 1 – முறைமை ஆய்வும் பயிற்சியும்

கட்டம் 11 – செயன்முறைப்படுத்தலை சீராக்குதல்

கட்டம் 111 - செயன்முறைப்படுத்துதல்

கட்டம் 1ஏ - கணக்காய்வும் மீளாய்வும்

2010 ஆம் ஆண்டுக் காலத்தின் போது ஐளுழு 9001:2008இன் கட்டம் 1 இன் 80மூ பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டின்போது கட்டம் 11 இன் கீழ் ஐ.எஸ்.ஓ. உபகுழு எல்லாப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் படுத்தும் விதத்தில் நியமிக்கப்பட்டதுடன், கருத்திட்ட ஆலோசகர், உயர் முகாமைத்துவ பதவியணியினர் மற்றும் தே.போ. ஆ. பதவியணியினருடனும் ஐ.எஸ்.ஓ. நடைமுறை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் ஒரு சுற்றுக் கலந்துரையாடலை நடாத்தியுள்ளார்.

மூன்றாவது கட்டத்தின் கீழ் உரிய இலக்கினை இனங்கண்டு, கலந்துரையாடி, அவ்விலக்கினை மற்றும் சுட்டுக்களைப் பற்றிய மீளாய்வொன்றை நடாத்தியுள்ளது. ஐளுழு இற்கான உள்ளகக் கணக்காய்வுக் கமிட்டி ஒன்றை நியமித்து அக்கமிட்டி உறுப்பினர்களுக்காக இலங்கை மன்றக் கல்லூரியில் பயிற்சிச் செயலமர்வொன்றை நடாத்தி முதல் உள்ளகக் கணக்காய்விற்கான கணக்காய்வு விசாரணைப் பட்டியலொன்றைத் தயாரித்துள்ளது.

### 4.14 "சிற்றி லைனர் கோச்சு சேவை" (City Liner Coach Service) மற்றும்

### "பார்க் அன்ட் ரைட் வசதிகள் (Park and Ride Facility)




தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமையில் கொழும்பு மற்றும் புறநகர் பிரதேசங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிற்றி லைனர் சொகுசு வசு சேவை மூலம் நகரத்திற்குள் நுழையும் தனியார் வாகனங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் அதன மூலம் வாகன நெரிசலைத் தவிர்த்து எரிபொருள் பாவனை மற்றும் வாகனங்களால் வெளியிடப்படும் புகையினால் சுற்றாடல் மாசுறலை குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுவாக நாளாந்தம் கொழும்பு மாநகரத்துக்குள் 75,000பிரயாணிகள் வந்து போவதுடன் அவர்களுள் 65மூ ஆனவர்கள் அரசாங்கப் போக்குவரத்துச் சேவையை உபயோகிப்பதுடன் எஞ்சிய 35மூ ஆனவர்கள் மோட்டடார் கார்கள், வேன்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்ற போக்குவரத்து முறைகளை உபயோகிக்கின்றனர். இந்த உயர் சொகுசு கோச்சு சேவை கொழும்பு நகரத்துக்கு வரும் பிரதான வீதிகளிலான போக்குவரத்து நெரிசல்களைக் குறைப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது. பிரயாணிகள் தங்கள் வாகனங்களைப் பாதுகாப்பான ஓர் இடத்தில் நிறுத்தி விட்டு சிற்றி லைனர் கோச்சுகளில் பயணத்தைத் தொடர்வர். வாகனங்களை நிறுத்திவிட்டு வேறு வாகனங்களில் பயணம் செய்ய வசதியளிக்கும் விதத்தில் 06 இடங்கள் ஏற்கெனவெ வடிவமைக்கப்பட்டுள்ளன. ‘‘சிற்றி லைனர் போச்சு சேவை நிறுத்தி விட்டு பயணம் செல்லும்’’ வசதிகள் இப்போது கட்டுபெத்தையில் இயங்குகின்றது. இப்போது மொறட்டுவையிலிருந்து கொழும்பு கோட்டை வரை 05 சிற்றி லைனர் வசுக்கள் சேவையில் ஈடுபடுகின்றன. இச்சேவைக்கான செலவு, உதவு தொகைகள் வாயிலாக பெற்றுக் கொள்ளப்படுகின்றன. தொடர்ச்சியாகச் செலவு செய்வதன் மூலமாகப் பெறும் நன்மைகள் பொருத்த வரையில் பெரியளவிலான உதவுதொகையை சிறு எண்ணிக்கையிலான பிரயாணிகளுக்கு செலவு செய்வது சாத்தியமற்றதாகும் என்பதுடன், நிதியைப் பொறுத்தளவில் கணக்கிடும் போதும் மொத்த ஆகு செலவில் 50மூஜ உதவு தொகை மூலம் ஈடுசெய்ய வேண்டியதாக இருப்பதாலும் 2011ஆம் ஆண்டின் பின்பு இச்சேவையை மேலும் நீடிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது.

## 05 தேசிய போக்குவரத்துத் தரவுகளைச் சேகரித்தல்

2010 மார்ச் மாதத்தில் தாபிக்கப்பட்ட இத்திட்டத்தின் பிரதான குறிக்கோளானது நிறுவனங்களுக்கும் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள கொள்கைகளை வகுக்கும் அதிகார சபைகளுக்கும் புள்ளிவிபரம் சார் தரவுகளை வழங்குதலும் போக்குவரத்து தொடர்பிலான பிரச்சினைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தேவையான தரவை சேகரித்து வைப்பில் வைத்து தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அவற்றுக்குத் தீர்வகளைக் காண்பதும் ஆகும்.

மேலும் இத்திட்டத்தின் மூலம் தனியார் போக்குவரத்து அமைச்சுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தேசிய போக்குவரத்துத் தரவுகளை தொகுத்துக் கொடுப்பதும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விதம் சேகரிக்கப்பட்ட தரவுகளை உபயோகித்து மரபு முறையான பகுப்பாய்வைச் சமர்ப்பிப்பதும் இத்திட்டத்தின் ஒரு கடமை ஆகும். இப்போக்குவரத்துத் தரவுகளைச் சேகரிப்பதற்கெனப் பின்வரும் நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன.

1. போக்குவரத்துச் அமைச்சு
2. தேசிய போக்குவரத்துச் ஆணைக்குழு
3. இலங்கைப் போக்குவரத்துச் சபை
4. வழிப்பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபை
5. இலங்கை புகையிரதத் திணைக்களம்
6. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்
7. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

8. இலங்கை மத்திய வங்கி
9. நிதி மற்றும் திட்டமிமல் அமைச்சு
10. புள்ளிவிபரவியல் திணைக்களம்
11. இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

இந்த அறிக்கைக்கான தரவுகளைத் திரட்டும் பணி 2010 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்டது. இந்த அறிக்கையின் இறுதி வரைவு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு இந்த அறிக்கையை அச்சிடுவதற்கான இணக்கப்பாடு மேல் குறிப்பிட்ட எல்லா நிறுவனங்களினதும் பெறப்பட்டுள்ளது. இத்தேவைக்கென பல்வேறு அச்சிடும் நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டின் முடிவில் தேசிய போக்குவரத்துத் தரவுகளைச் சேகரித்தல் - 2010இன் 1500 பிரதிகளை அச்சிடுவதற்கும் போக்குவரத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு வினியோகிப்பதற்கும் நாடு பூராவும் உள்ள பொது நூலகங்களுக்கு வினியோகிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இறுவட்டுக்களிலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் இணையத்தளத்திலும் இந்த அறிக்கையைச் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பில் இந்த ஆண்டுக் காலத்தின் போது செலவிடப்பட்ட தொகை ரூபா 0.3 மில்லியன்களாகும்.

## 06 நெடுந்தூரச் சேவைகளுக்கென வசு தரிப்பிட சமிக்ஞைகளை அமைத்தலும் பராமரித்தலும்

நெடுந்தூரப் பயணத்தை மேற்கொள்ளும் பிரயாணிகளுக்குப் பாதுகாப்பானதும் நம்பிக்கையானதுமான சேவையை வழங்குவதற்கும் நெடுந்தூர வசுத் தரிப்பிடங்களைப் பிரயாணிகள் எளிதில் அடையாளங் கண்டு கொள்வதற்கும் இத்திட்டம் தாபிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டின் இறுதியில் மேல் மாகாணத்தின் பிரதான நுழைவழிகள் 04இல் கீழே காட்டப்பட்டுள்ளளவாறு நெடுந்தூர வசு தரிப்பிட சமிக்ஞைகள் 125 அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக இவ்வாண்டிற்குள் செலவிடப்பட்ட தொகை 2 மில்லியன் ரூபாவாகும்.

**<u>2011.12.31ஆந் திகதியில் அமைக்கப்பட்ட நெடுந்தூர வசு தரிப்பிட சமிக்ஞைகளின் எண்ணிக்கை</u>**

| சேவை மேற்கொள்ளப்படும் பயணவழி | அமைக்கப்பட்டுள்ள சமிக்ஞைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மகரகமை – களுஅக்கல | 16 |
| பேலியகொடை – வேவல்தெனிய | 24 |
| களுஅக்கல – அவிசாவளை | 05 |
| ஒருகொடவத்த - ஹங்வெல்லை | 08 |
| அவிசாவளை – மொணராகலை | 50 |
| பேலியகொடை – தோப்புவ | 22 |
| மொத்தம் | 125 |

மூலம்- திட்டமிடல் பிரிவு, தேபோஆ

## 08 இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல்

மாகாணங்களுக்கிடையேயான போக்குவரத்துச் சேவைகள் தொடர்பிலான தகவல்களைப் பிரயாணிகளுக்கு வழங்கவும் அரசாங்க நியமங்களுக்கமைவாகப் பொருத்தமுடைய பிரிவுகளால் வழங்கப்பட்ட தகவல்களை அனுமதிச் சீட்டுக்கள் வைத்திருப்போரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்திலும் தகவல்கள் இணையத்தளத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டுக்காலத்தின் போது தற்போதுள்ள தகவலை இற்றைப்படுத்தவும் தகவல் தேடலுக்கு வசதியளிப்பதற்குமான வழிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

## 09 தனியார் வசு சேவைகளை மீளமைத்தல்

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்திற்கான திருத்தங்கள்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்துக்கான தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் வசு சேவைகளை மீள அமைப்பதற்கான பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

I. எல்லா வகையான பெருந்தெருக்களிலான போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பிலும் கொள்கைகளைத் தெளிவாக விவரிக்க வேண்டியதுடன், போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பிலான எல்லாத் திட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் ஆணைக்குழுவின் கடமைகளை விரிவாக்குதல்

II. பணிப்பாளர் அதிபதியை நியமித்தல் மற்றும் ஆணைக்குழுவின் அதிகாரங்களைக் கையளித்தல்

III. தனி வசுச் சொந்தக்காரர்களை தொழில் ரீதியாக முகாமைத்துவம் செய்யும் கம்பனிகளாக மாற்றி பயனுறுதிக் கொண்டதும் உற்பத்திசார் வசுச் சேவைக்கென தனியுரிமைகளையும் அனுமதிப் பத்திரங்களையும் வழங்குதல்

IV. இலங்கையில் பிரயாணிகளுக்கும் பண்டங்களுக்கும் நியமங்களையும் குறித்துரைப்புகளையும் குறித்துரைத்தல்

V. வசு இயக்கும் வேளையில் பிரச்சினைகளுடன் கூடிய போட்டிகளைத் தவிர்த்து வசு இயக்குனர்கள் ஒவ்வொருவருக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்குதல். நாள் முழுதும் நம்பிக்கையானதும் ஒழுங்கானதுமான வசுச் சேவையை உறுதிப்படுத்தும் விதத்திலான நேர அட்டவணைகளை ஒழுங்கமைத்தல்

VI. இடைநிறுத்தம், மிகை அறிவீடு, உடைமை மற்றும் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்தல் மற்றும் மேற்படி விடயங்கள் தொடர்பில் மேன்முறையீட்டு நடைமுறைகள் தொடர்பில் புதிய விதிகளைச் சேர்த்துக் கொள்ளுதல்.

VII. வசுக்களை இயக்கும் வேளைகளில் அதிகாரமற்றவர்கள் செல்வாக்குச் செலுத்துதல் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் விதத்தில் ஏற்பாடுகளைச் செய்தல்

VIII. கட்டண சுட்டிகள் மூலம் வருடாந்த கட்டணத்தைச் சீரமைத்தல்

IX. பொருள் விளக்கம் தொடர்பிலான பிரிவைத் திருத்தியமைத்தல்

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய கொள்கைத் திருத்தங்கள் உட்பட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிலான சட்ட மூல வரைவு வரையப்பட்டு சட்ட மா அதிபரின் சட்ட ஆலோசனைக்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## சபைக் கூட்டம்

நடப்பாண்டின் போது நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 15 ஆகும். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் ஆண்டின் போது நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

# வருடாந்தக் கணக்கு

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## 2011-12-31 ஆண்டிறுதி நிதி பாய்ச்சல் கூற்று

| | 2011 | 2010 |
|---|---|---|
| தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக காசுப்பாய்ச்சல் | | |
| சாதாரண செயற்பாடுகள் மீதான அதிகரிப்பு(குறைவு) | 186,879 | 68,003 |
| **காசு இல்லா வேறுபாடுகள்** | | |
| தேய்மானம் | 8,181 | 15,695 |
| தாமதமான வருமானம் | -374 | - 811 |
| கொடுப்பனவில் அதிகரிப்பு | - 16,359 | - 6,695 |
| வட்டி கிடைப்பனவுகள் | - 16,075 | -- 4,566 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு | 2,876 | - 1,044 |
| கிடைக்க வேண்டிய வருமான அதிகரிப்பு | - 8,468 | 45,052 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | - | 157 |
| மீண்டெழும் செலவினத்துக்கான அரசாங்க ஏற்பாடு | - 6,400 | - 34,200 |
| கருத்திட்டச் செலவுகள் | - 312,213 | - 391,045 |
| முடிவுறா வேலைகள் | - 3,602 | - 13,053 |
| **தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப்பாய்ச்சல்** | - 165,555 | -- 309,117 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மீதான காசுப் பாய்ச்சல்** | | |
| பொறிததொகுதி மற்றும் கருவிகள் கொள்வனவு | 30,028 | - 3,179 |
| பெற்ற வட்டி | 16,074 | - 4,566 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மீதான தேறிய காசுப் பாய்ச்சல்** | **46,102** | **1,387** |
| **நிதி நடவடிக்கைகள் மீதான காசுப் பாய்ச்சல்** | | |
| மூலதனச் செலவுகளுக்கான ஏற்பாடுகள் | 329,080 | 405,900 |
| மீண்டெழும் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் | 6,400 | 34,200 |
| பணம் மீளப்பெறல் | - | - |
| **நிதி நடவடிக்கைகள் மீதான தேறிய காசுப் பாய்ச்சல்** | **335,480** | **440,100** |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு.˙.(குறைவு) | 216,027 | 132,370 |
| ஆண்டிற்குள் காசும் காசுக்கு சமமானவையும் | 165,185 | 32,815 |
| ஆண்டினிறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் | **381,212** | **165,185** |

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## 2011.12.31ஆந் திகதியில் முடிந்த ஆண்டுக்கான நிதிநிலைமைக்கூற்று

**தொழிற்படு வருமானம்**

| | 2011 | 2010 |
|---|---|---|
| மீண்டெழும் செலவினத்துக்காக அசாங்கத்திடமிருந்து பெற்ற ஏற்பாடு | 6,400,000.00 | ,34,200,000.00 |
| கருத்திட்டங்களுக்கான அரச நிதியங்கள் | 312,212,903.46 | 381,144,599.39 |
| மூலதனக் கருத்திட்டங்களுக்கான அரச உதவுதொகை | - | 9,900,000.00 |
| ஏனைய வருமானம் | 293,031,729.36 | 137,780,377.43 |
| மொத்த வருமானம் | **611,644,632.82** | **563,024,976.82** |
| **தொழிற்படு செலவுகள்** | | |
| ஊழியர் பணிக்கொடை | 68,510,925.17 | 63,711,067.48 |
| போக்குவரத்துச் செலவுகள் | 8,324,281.31 | 5,286,708.40 |
| விசேட கருத்திட்டச் செலவுகள் | 312,212,903.46 | 391,044,599.39 |
| போக்குவரத்து அபிவிருத்தி நடவடிக்கைகள் | 100,000.00 | 171,965.00 |
| பயணச் செலவுகள் மற்றும் பிழைப்பூதியக் கொடுப்பனவு | 3,019,450.40 | 2,837,240.81 |
| நிறுவனச் செலவுகள் | 10,969,221.04 | 8,530,320.23 |
| நிலையான சொத்துக்களின் புதுப்பித்தல்களும் பாரமரிப்பும் | 1,289,70603. | 1,265,896.57 |
| ஊழியர் நலன்புரி செலவினம் | 4,033,061.57 | 2,956,607.07 |
| பதவியணியினர் அபிவிருத்தி செலவினம் | 1,129,265.09 | 680,318.72 |
| சட்ட மற்றும் பிற கட்டணங்கள் | 807,325.00 | 949,002.00 |
| தொடர்பாடல் செலவுகள் | 4,266,255.88 | 705,238.15 |
| தேய்மானம் | 8,180,844.55 | 15,695,235.94 |
| ஏனைய செலவுகள் | 1,757,373.80 | 943,473.23 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | **424,600,613.30** | **494,777,672.99** |
| தொழிற்பாட்டு செலவின அதிகரிப்பு.∴(குறைவு) | **187,044,019.52** | **68,247,303.83** |
| நிதிசார் கட்டணங்கள் | 188,874.23 | 244,490.60 |
| **மொத்த தொழிற்பாடற்ற வருமானம்** | | |
| சொத்துக்களை விற்றுத் தீர்த்தல் | 24,639.38 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேறிய அதிகரிப்பு.'.குறைவு | | **186,879,784.67** | | **68,002,813.23** | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | 5,921,526.38 | | - 723,763.85 | |
| ஆண்டிற்கான தேறிய அதிகரிப்பு.'.(குறைவு) | | 192,801,311.05 | | 67,279,049.38 | |

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## 2011.12.31ஆந் திகதியில் நிதிக்கூற்று

| | | 2011 | 2011 | 2010 | 2010 |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி , உபகரணங்கள் | | 306,644,959.69 | | 267,790,978.63 | |
| முடிவுறா வேலை (அலுவலகத் தொகுதி) | | 130,572,254.12 | | 126,970,04492. | |
| | | | 437,217,213.81 | | 394,761,023.55 |
| நூலகப் புத்தகங்கள் | | | 652,545.03 | | 617,545.03 |
| | | | | | |
| முதலீடுகள் | | 17,906,986.67 | 17,906,986.67 | 15,754,805.73 | 15,754,805.73 |
| பணிக்கொடை நிதிய வைப்புக்கள் | | | 455,776,745.51 | | 411,133,374.31 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| கையிருப்பு | | 1,788,108.95 | | 4,715,274.15 | |
| கிடைக்க வேண்டிய வருமானம் | | 27,799,954.44 | | 19,334,604.62 | |
| முன் கொடுப்பனவுகள் | | 540,358.83 | | 489,518.56 | |
| வங்கி வைப்புக்கள் | | 361,797,087.00 | | 147,696,087.00 | |
| காசும் காசுக்கு சமமானவையும் | | 597,165.80 | | 159,247.27 | |
| வங்கிக் கணக்குகள் | | 911,851.58 | 393,434,526.60 | 1,576,946.16 | 173,971,677.76 |
| மொத்த சொத்துக்கள் | | | 849,211,272.11 | | 585,105,052.07 |
| **பொறுப்பக்கள்** | | | | | |
| **நடைமுறை பொறுப்பக்கள்** | | | | | |
| **செலுத்த வேண்டிய செலவினங்கள்** | | 25,212,108.62 | | 27,154,942.30 | |
| சேர் செலவு | | 69,356,343.91 | | 35,712,316.01 | |
| தாமதித்த வருமானம் மீதான ஒதுக்கு | | 180,473,253.35 | | 153,559,460.85 | |
| தவணைமுறை கடன் வழங்கல் திட்டம் | | 17,632,912.00 | 292,674,617.88 | 17,632,912.00 | 234,059,631.16 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| ஒதுக்குகள் | | 19,345,510.34 | 19,345,510.34 | 17,317,284.00 | 17,317,284.00 |
| | | | 537,191,143.89 | | 333,728,136.91 |

**மொத்த தேறிய பொறுப்புக்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| **தேறிய பொறுப்புக்கள்.·.உடைமை உரிமை** | | | | | |
| திரண்ட நிதியம் | | 318,872,736.30 | | 251,593,686.92 | |
| மூலதனச் சொத்துக்களுக்கான அரசாங்கத்தின் ஏற்பாடு | | 16,867,096.54 | | 14,855,400.61 | |
| அரசாங்க ஏற்பாடுகள் | | 8,650,000.00 | 344,389,832.84 | - | 266,449,087.53 |
| | | | | | |
| **ஆண்டுக் காலப்பகுதிக்கான அதிகரிப்பு.·. குறைவு** | | | 192,801,311.05 | | 67,279,049.38 |
| | | | | | |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | | 537,191,143.89 | | 333,728,136.91 |
| | | | | | |

---------------------------------------------------------------------

**ஒப்பம்**

**கணக்காளர்**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

- ---------------------------------------------------------------------

**ஒப்பம்**

**பதில் பணிப்பாளர் (நிதி மற்றும் கொள்வனவு)**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

-----------------------------------------------------------------

**ஒப்பம்**

**தலைவர்**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

**<u>தேசிய போக்குவரத்து ஆணைக்குழு</u>**

**<u>2011.12.31 இல் முடிந்த ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள்</u>**

**<u>கணக்கீட்டு நடைமுறைகள்</u>**

# 1. முக்கிய கணக்கீட்டு நடைமுறைகள்

### 1.1 பொது நடைமுறைகள்

### 1.1.1 தாயரிப்பிற்கான அடிப்படை

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதி நிலைமைக் கூற்று, நிதி நடவடிக்கைகளின் கூற்று, காசுப்பாயச்சல் கூற்று, கணக்கீட்டு நடைமுறைகள், கணக்கீட்டு அட்டவணைகள் (நிதிக்கூற்று) எனபன இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கண்கீட்டு நியமங்கள் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 1.1.2 ஒப்பீட்டுத் தகவல்

நிறுவனத்தால் சென்ற ஆண்டு பின்பற்றப்பட்ட அதே கணக்கிடுதல் முறை தொடர்ந்தும் பின்பற்றப்பட்ட அதேவேளை நடைமுறை ஆண்டுகளின் இலக்கங்களுடனும் உள்ளீடுகளுடனும் மீள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

### 1.1.3 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்குப் பின் இடம்பெற்ற எல்லா பருப்பொருள் நிகழ்வுகளும் கவனத்திற் கொள்ளப்பட்டு தேவையான இடத்தில் சீராக்கல்கள் செய்யப்பட்டு அல்லது நிதிக் கூற்றுகளிலான அந்தக் குறிப்புகளில் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

# 1.2 சொத்துக்களின் மதிப்பீடு

### 1.2.1 கையிருப்புக்கள்

கையிருப்புக்கள் யாவும் ஆகுசெலவிலேயே மதிப்பிடப்பட்டுள்ளன.

### 1.2.2 வியாபாரமும் ஏனைய கிடைப்பனவுகளும்

வியாபாரமும் ஏனைய கிடைப்பனவுகளின் பெறுமானம் உணரப்படும் வேளையலான மதிப்பீட்டுப் பெறுமானமத்துக்கமைய மதிப்பிடப்பட்டுள்ளன.

### 1.2.3 காசும் காசுக்கு சமமானவையும்

கையிலுள்ள பணம், வங்கியிலுள்ள கோரிக்கை வைப்புகடகள், உடனடி.்.நிலையான வைப்புக்கள், பணிக்கொடை நிதியங்கள் என்பன காசும் காசுக்கு சமமானவை என இனங்காணப்படுகின்றன.

### 1.2.4 சொத்துக்கள், பொறித்தொகுதி, சாதனங்கள்

#### (அ) ஆகுசெலவும் மதிப்பீடும்

சொத்து ,பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் ஆகியவற்றின் பெறுமானம் என்பன திரண்ட தேய்மானம் கழித்து ஆகுசெலவில் குறிப்பிடப்பட்டுளுள்ளது.

சொத்து ,பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் ஆகியவற்றின் ஆகுசெலவு என்பதன் கருத்து கொள்வனவுச் செலவு அல்லது கட்டுமானப்பணிச் செலவு மற்றும் சொத்துக்களை தொழிற்படு நிலைமைக்கு கொண்டு வருவதற்கான செலவுஎன்பவற்றைக் குறிக்கும்.

நிலையான தன்மையைக் கொண்ட சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது உழைக்கும் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கென செலவிட்ட தொகை ஆக்கப்பொருட் செலவினம் எனக் கணிக்கப்பட்டது.

(ஆ) தேய்மானம்

தேய்மானம் தொடர்பிலான ஏற்பாடு நேர்கோட்டு முறையில் சொத்தின் ஆகுசெலவு அல்லது எல்லாச் சொத்துக்களினதும் பொறித் தொகுதி மற்றும் சாதனம் ஆகியவற்றின் சிறையிலி நிலம் நீங்கலாக சொத்தின் உபயோகமான ஆயுட்காலத்திற்கும் சமமான ஆண்டுத் தவணைக் கட்டணங்களாக பின்வரும் விதத்தில் கணிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 5 ஆண்டுகளிற்குள் |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 ஆண்டுகளிற்குள் |
| அலுவலக உபகரணங்கள் | 5 ஆண்டுகளிற்குள் |
| பல்வேறு உபகரணங்கள் | 5 ஆண்டுகளிற்குள் |
| கணினிகளும் அச்சிடும் இயந்திரங்களும் | 4 ஆண்டுகளிற்குள் |
| இயந்திரங்கள் | 5 ஆண்டுகளிற்குள் |
| கட்டடங்கள் | 20 ஆண்டுகளிற்குள் |

நூலகப் புத்தகங்களுக்கு தேய்மான ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டுக்கான தேய்மானம் செய்து கொள்ளப்படாத அதேவேளை அவற்றை விற்றுத் தீர்க்கும்ஆண்டின் போது முழு ஆண்டுக்குமான தேய்மானம் செய்து கொள்ளப்படுகின்றது.

### 1.2.5. முதலீடுகள்

முதலீட்டுக்கான செலவு என்பது முதலீட்டை கைப்பற்றும் செலவு ஆகும்.

## 1.3 பொறுப்புக்களும் ஒதுக்குகளும்

### 1.3.1 வியாபாரமும் ஏனைய கொடுப்பனவுகளும்

பாதைகளுக்கான அனுமதிப் பத்திரங்களும் நிர்வாகக் கட்டணங்களும் பெறுமானத்திற்கு ஏற்பப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.3.2 ஓய்வூதிய நன்மை மீதான செலவுகள்

(அ) இல 16 இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி " ஓய்வூதிய நன்மைச் செலவுகள்" ஊழியர்களின் சேவை தொடங்கிய நாளிலிருந்து சேவை செய்த ஒவ்வொரு ஆண்டுக்கும் ஊழியருக்கு அவர் சேவையாற்றிய ஆண்டின் ½ மாதச் சம்பளம் செலுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டின் இல 12 பணிக்கொடை செலுத்ததல் சட்டத்தின் படி ஒரு ஊழியருக்கான பணிக்கொடை கடன பொறுப்பு தொடர்ச்சியாக ஐந்தாண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்ததன் மட்டிலேயே எழுகின்றது.

உண்மையான பணிக்கொடைப் பணம் தனியான ஒரு நிதியத்தில் வைப்பிலிடப்படுவதில்லை என்பதுடன் இவ்விடயம் ஐந்தொகையில் நடைமுறையற்ற கடன் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) **உதவுதொகைத் திட்டம் என்பதின் வரைவிலக்கணம் - ஊழிர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்கு உதவுதொகை வழங்கத் தகைமையுடைய எல்லா ஊழியர்களுக்கும் பொருத்தமுடைய நிலையியற் சட்டங்கள் மற்றும் விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றால் பாதுகாக்கப்படுகின்றன.

### 1.3.3 தாமதித்த வருமானத்திற்கான ஒதுக்கீடு

முனனைய ஆண்டின் திறைசேரி ஒதுக்கீடுகளிலிருந்துபெறப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்போடப்பட்ட வருவாய்க்கான சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

## 1.4 வருமானக் கூற்று

### 1.4.1 மொத்தத் திரும்பல்

மொத்தத் திரும்பல் என்பது தெசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சேவை வழங்கல் மற்றும் பொது நடவடிக்கைகளிலிருந்து பெறப்படும் தொகைகளை பிரதிபலிக்கின்றநது.

### 1.4.2 வருமானமும் செலவினமும்

#### 1.4.2.1 வருமானத்தை இனங்காணுதல்

நிறுவனத்திற்கு பொருளாதார ரீதியான இலாபங்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களிச் அவற்றை வருமானமாக இனங்காணல்

#### 1.4.2.2 செலவுகளை இனங் காணுதல்

நிறுவனத்தைப் பேணுதல் தொடர்பில் செலவிடப்பட்ட எல்லா செலவுகள், மற்றும் சொத்துக்கள். சாதனங்கள். பொறித் தொகுதிகள் ஆகியவற்றை வினைத்தறனுடன் பேணுவதற்கான செலவுகள் என்பனவும் ஆண்டுக்கான இலாபங்களைக் கணிப்பிடும் வேளையில் வருமானத்தில் காட்டப்பட்டுள்ளன.

## 2. தாபனத் தகவல்கள்

### 2.1 சட்ட அமைப்பு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 1991இன் இல 37 பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

### 2.2 அடிப்படை நடவடிக்கைகளும் செயற்பாட்டின் தன்மையும்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கடமைகளாவன தேசிய கொள்கைக்கு அமைவாக பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகளை நடாத்தும் வசுக்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு மதியுரை வழங்குவதுடன், குறிப்பிட்ட பிரதேசங்களில் பிரயாணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வசுக்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதலும்.

### 2.3 ஊழியர் எண்ணிக்கை

ஆண்டின் இறுதியில் மொத்த ஊழியர் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரம் | 147 |
| 2. | ஒப்பந்த அடிப்படை | 11 |
| 3. | ஒப்படைப்பின் பேரில் | 04 |
| | **மொத்தம்** | 162 |

# கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය
எனது இல
My No } ஆர்/பீ/என்ரீசீ/எப்ஏ/2011

ඔබේ අංකය
உமது இல
Your No. }

දිනය
திகதி
Date } 2012 நவம்பர் 15

தலைவர்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය
தொலைபேசி
Telephone. } 2887028-34

ෆැක්ස් අංකය
பக்ஸ் இல
Fax No. } 2887223

ඉලෙක්ට්‍රොනික තැපැල්
மின்-அஞ்சல்
E-mail. } oaggov@sltnet.lk

அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்

செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்**

---

கணக்கீடு செய்யும் போது சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளுடன் இணங்காத பின்வரும் பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காசுப் பாய்ச்சல் பின்வரும் குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(i) பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 2,999,312 கூட்டுமொத்தமான பணக் கொடுப்பனவு காசுப் பாய்ச்சலாக பதிவதற்குப் பதிலாக பெறுவனவு காசுப்பாய்ச்சலாகப் பதியப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது சொத்துக்களை விற்றுத் தீர்த்தல்களின் மூலம் ரூபா 35,814 தொகையான பணமும் ரூபா 24,639 தொகையான இலாபமும் காசுப் பாய்ச்சலில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய பெறுமதியின் அதிகரிப்பு காசுப்பாய்ச்சலில் காட்டப்பட்டுள்ள பெறுமதியினை விட ரூபா 50,088,421 தொகையினால் குறைவான பெறுமதியாகும். இந்த வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை ரூபா 6,697,050 கூட்டுமொத்தமான பிற்போட்ட வருமானங்களை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாததன் காரணமாக மிகைகள் அப்பெறுமதியினால் குறைத்தும் பிற்போட்ட வருமான ஒதுக்கீடுகளின் மீதி அப்பெறுமதியினால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,374,123 கூட்டுமொத்தமான நிலையான சொத்துக்களை மூலதனமாக்கும் போது அவற்றின் கிரயம் ரூபா 130,478 பெறுமதியினால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கட்டிடத்தினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 721,140 கூட்டுமொத்தமான செலவுகள் கட்டிட கிரயத்திற்கு மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இக்காரணத்தினால் ஆண்டிற்கான மிகை அத்தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களுக்காக கிடைக்கவேண்டிய வட்டி வருமானம் ரூபா 9,832,040 ஆக இருந்த போதிலும் கிடைக்க வேண்டிய அந்த வருமானம் ரூபா 9,633,007 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மிகையானது ரூபா 199,032 பெறுமதியினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 3 செயற்திட்டத்தின் கீழ் செலவுகளாக ரூபா 22,475,871 அதிகரித்தும் மற்றுமொரு செயற்திட்டத்தின் கீழ் செலவுகளாக ரூபா 305,616 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அதன் தேறிய விளைவுகளாக ரூபா 22,170,255 தொகையினால் செயற்திட்ட செலவுகள் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2012 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 2011 ஆம் ஆண்டிற்காகச் செய்யப்பட்ட செலவுகள் அட்டுறு செலவுகளாக கணக்குவைக்கப்படாததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான அட்டுறு செலவுகள் ரூபா 23,583,430 தொகையினால் அதிகரித்தும் ரூபா 34,761 தொகையினால் குறைத்தும் கணக்கீடு செய்ததன் காரணமாக ரூபா 23,548,669 தொகையினால் ஆண்டிற்கான மிகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பஸ்டியன் மாவத்தை பஸ்தரிப்பிடத்திற்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 02 ஆலோசகர்களுக்கும் 02 ஒருங்கிணைப்பாளர்களுக்கும் சம்பளமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,516,571 தொகை ஏனைய 02 செயற்திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பின்வருமாறு 03 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 17,583,296 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அது தொடர்பான உப அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 17,717,980 ஆக இருந்ததனால் ரூபா 268,381 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்காக சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது விற்றுத்தீர்க்கப்பட்ட ரூபா 921,038 கிரயமான சொத்துக்களுக்குரிய பதிவேட்டினை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காததன் காரணமாக பெறுமானத்தேய்வு ஒதுக்கீடுகளிலிருந்து நீக்கப்பட்ட பெறுமதியினையும் சொத்துக்களை விற்றுத்தீர்த்ததிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபத்தினையும் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் மாகாண போக்குவரத்து அதிகாரசபை அலுவலகம் மற்றும் பஸ்தரிப்பிடங்களை அவதானிப்பதற்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வாகனத்திற்காக ரூபா 350,551 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் முறைப்படியான நிகழ்ச்சித்திட்டமோ அல்லது அச்செயற்பாட்டின் இறுதியில் அது தொடர்பான அறிக்கையோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பஸ்டியன் மாவத்தையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆணைக்குழுவின் நடமாடும் பரிசோதனை உத்தியோகத்தர்களின் நடமாடும் பரிசோதனை தொடர்பான அறிக்கை கணக்காய்வுப் பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்படாமையால் அந்த உத்தியோகத்தர்களின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்களைச் சமர்ப்பிப்பதற்கும் செயற்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கும் முடியாதிருந்தது.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் மூலம் 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவினை நீக்குதல் மற்றும் அதற்குப் பதிலாக 18(1) ஆம் | செல்லுபடியான பயணிகள் சேவை உத்தரவுப் பத்திரம் இல்லாது ஓடுகின்ற பேருந்துகள் தொடர்பாக வழக்குகள் தாக்கல் செய்து தண்டனை விதித்தல் இடம்பெற்றிருந்த போதிலும் அடிக்கடி உத்தரவுப் பத்திரம் இல்லாது பேருந்து ஓடுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. |

145

பிரிவினை பிரதியீடு செய்தல்.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் நி.பி 371(2)(ஆ)

(i) முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அச்செயற்பாடு முடிவடைந்த உடன் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தீர்த்துவைக்கப்படாது 31 சந்தர்ப்பங்களின் போது 02 நாட்களிலிருந்து 59 நாட்கள் வரையான கால வீச்சில் தாமதமடைந்திருந்தது.

(ii) பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களையும் செலவுகளையும் ஒப்பீடு செய்யும் போது செலவுகளின் சதவீதம் 25% இலிருந்து 49.7% வரையான சந்தப்பங்கள் 07 ஆக இருந்ததுடன் ரூபா 30,000 முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அதில் எதுவித செலவுகளும் மேற்கொள்ளப்படாது அப்பணம் 10 நாட்களின் பின்னர் மீளத் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 1998 திசெம்பர் 30 ஆந் திகதிய 29/98 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம்

3.2.1(viii) ஆம் பந்தி

மொழித்தேர்ச்சிப் படியினைப் பெற்றுக்கொள் வதற்கு சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ள முடியாத நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் அதன் செல்லுபடித்தன்மை தொடர்பாக சான்றுபடுத்தப்படாது உத்தியோகத்தருக்கு 2009 மே 15 ஆந் திகதியிலிருந்து ரூபா 2,500 தொகையான ஒரு தடவையில் செலுத்தப்படுகின்ற படிப் பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 150 தொகையான சம்பள ஏற்றமும் ஓய்வூதியத்தினைச் சாராத ரூபா 325 தொகையான சம்பள ஏற்றமுமாக 2011 திசெம்பர் வரை ரூபா 16,240 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஈ) | 2004 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தி | வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனம் ஒன்று தொடர்பாக செலுத்தவேண்டிய உச்ச அளவு தொகை ரூபா 40,000 ஆக இருந்த போதிலும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 86,229 மற்றும் ரூபா 339,536 தொகைகள் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2005 சனவரி 31 ஆந் திகதிய பீஈடீ/28 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | மீளாய்வாண்டின் போது உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு வாடகை அடிப்படையில் 03 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 02 வாகனங்கள் தொடர்பாக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய வழிகாட்டல் கோவை | |
| | (i) 3.2.2 (அ) மற்றும் 3.4.3 (ஆ)(ii) பந்திகள் | மீளாய்வாண்டில் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்குனர்களின் பெயர்களை உள்ளடக்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் திறந்த கேள்வி அல்லது பத்திரிகை விலைமனுக் கோரல்களும் இன்றி வாகன வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். |
| | (ii) 5.4.10 (இ) பந்தி | பயண முடிவிட பெயர்ப் பலகை ஸ்டிக்கர்களை அச்சிடும் ஒப்பந்தத்தின் செயலாற்றல் பிணையாக ரூபா 78,000 வைப்புச் செய்யவேண்டிய போதிலும் ரூபா 33,000 குறைத்து வைப்புச் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. |
| | (iii) 8.11.06(அ) பந்தி | பயண முடிவிட பெயர்ப்பலகை ஸ்டிக்கர்களை அச்சிடும் நிபந்தனை ஒப்பந்தக்காரரினால் மீறப்பட்டிருந்தும் மீறப்பட்டுள்ள ஒப்பந்தம்/ வழங்குனர் தொடர்பாக தரவு மூலம் சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆணைக் குழுவினால் பேணப்பட்டிருக்கவில்லை. |

(143)

(எ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீசடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 08 ஆம் பந்தி

ஆணைக்குழுவினால் பத்திரிகை அறிவித்தலினை வெளியிடும் போது அரசாங்க ஊடாக நிறுவனங்களிலிருந்து உச்ச அளவு கழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாது 14 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,830,382 கூட்டுமொத்த பெறுமதியான அறிவித்தல்களை வெளியிடுவது 02 தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த ஆண்டிற்கான மிகை ரூபா 192,801,311 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 68,002,813 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 124,798,498 தொகையான அதிகரிப்பு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதற்கான வீதி உத்தரவுப்பத்திர வருமானம் ரூபா 131,947,807 தொகையும் வட்டி வருமானம் ரூபா 16,074,674 தொகையும் ஏனைய வருமானம் ரூபா 145,033,887 தொகையும் ஆக வருமானம் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 குறிக்கோள்களுக்கு முரணான செலவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெம்செரிய செயற்திட்டத்தின் தொடக்க குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாடுகளைத் தவிர்த்து மேலதிக ஏனைய செலவுகளுக்காக ரூபா 7,335,546 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த செலவின் 48.49% ஆக இருந்தது.

(ஆ) சிசு செரிய செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 9,548,441 தொகையான நிதி ஏற்பாடு ஏனைய செலவுகளாகச் செலவு செய்யப்பட்டிருந்தது. அது மொத்த செலவுகளின் சதவீதமாக 4.67% ஆக இருந்தது.

142

(இ) ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளரின் தருஸ்மன் அறிக்கைக்கு எதிராக பத்து இலட்சம் கையொப்பமிடும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஆணைக்குழுவினால் ரூபா 248,889 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது ஆணைக்குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக உதவியளிக்காத கொடுக்கல் வாங்கலாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு நகரத்தில் காணப்படுகின்ற அதிக வீதி நெரிசலினை குறைத்தல், எரிபொருள் பாவனை மற்றும் சுற்றாடல் மாசடைதலினைக் குறைக்கும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட சிடிலயினர் கோச் சேவைக்காக 2009 மார்ச்சிலிருந்து 2011 திசெம்பர் வரை ரூபா 36,594,963 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த குறிக்கோள்கள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தற்பொழுது இச்சேவை கைவிடப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆணைக்குழுவினால் புதிய பிரயாணிகள் சேவை உத்தரவுப் பத்திரத்தினை வழங்கும் போது உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்காக பிரயாணிகள் வேண்டுகோள் காணப்படுமா என்பது தொடர்பான ஆய்வின் பின்னர் இடம்பெற்றதாக காட்டப்பட்டிருந்த போதிலும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது 12 உத்தரவுப் பத்திரங்கள் அவ்வாறு மீளாய்வினை மேற்கொள்ளாது வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

15 நடமாடும் பரிசோதனை உத்தியோகத்தர்களினால் ஒரு மாதத்திற்கு முறையே 11 நாட்களிலிருந்து 22 நாட்கள் வரையும் 15 நாட்களிலிருந்து 21 நாட்கள் சேவையில் ஈடுபட்டிருந்தமையால் அச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நாட்களின் எண்ணிக்கை போதியதாக இருக்கவில்லை.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பூர்த்திசெய்யப்பட வேண்டிய நிபந்தனை உண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சிக்காது கெம் செரியவிற்கான 12 பேருந்துக்கள் சம்பந்தமாக 2010 ஆம் ஆண்டில் ரூபா 5,640,977 தொகை

செலுத்தப்பட்டிருந்ததுடன் நிறுவனத்தினால் இது தொடர்பாகப் பரிசோதனை செய்த போது இத்தொகை மோசடி செய்யப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) 03 வீதிகளுக்காக 04 பிரயாணிகள் சேவை உத்தரவுப் பத்திரங்களுக்காக விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் அதிக விலை மனுக்களைக் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு செல்வாக்கு காணப்பட்டமையின் காரணமாக உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் மறுக்கப்பட்டதாக ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டது. பின்னர் இரண்டாவது கூடிய விலை மனுவினைச் சமர்ப்பித்த கேள்விதாரரின் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக கேள்வியை இரத்துச் செய்து பிணை மற்றும் விண்ணப்பக் கட்டணமாகப் பெற்றுக்கொண்ட ரூபா 60,000 கூட்டுத்தொகை முழுவதும் விண்ணப்பதாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்கேள்விக்காக ரூபா 72,912 தொகை பத்திரிகை விளம்பரத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது.

**4.5 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகளுக்காக ஒருங்கிணைந்த நேர அட்டவணையைத் தயாரிக்கும் தேசிய கொள்கையின் பிரகாரம் ஆணைக்குழு ஒருங்கிணைந்த நேர அட்டவணையினைத் தயாரித்திருந்தும் அவற்றை அமுல்படுத்துவதற்காகக் காணப்பட்ட தடைகள் மற்றும் எல்லைகளை தீர்வு செய்வதற்கு முடியாதிருந்தமையால் தேவைப்பாட்டின் பேரில் போக்குவரத்து வசதிகளை வழங்குதல், தரத்தினை மேம்படுத்துதல், சட்டரீதியான தன்மையிமையினையும் முகாமைத்துவ ஆற்றலினையும் மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) வடக்கு மற்றும் தெற்கு பிரதேசங்களில் பேருந்துகளுக்காக ஜீபீஎஸ் உபகரணங்களைப் பொருத்தும் போது சதவீதம் முறையே 14% மற்றும் 62% ஆக இருந்தன. மீளாய்வு நடவடிக்கைகளுக்காக கட்டுப்பாட்டு அறையில் மேற்பார்வை நடவடிக்கைகளை ஆரம்பிக்காமையின் காரணமாக அந்த உபகரணத்தை நிறுவும் குறிக்கோளினை அடைந்து கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே முன்னோடி செயற்திட்டத்தின் கீழ் அந்த உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் 20 உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக ரூபா 600,000 தொகையும் பயன்படுத்தப்பட்ட 20 சிம்காட்களுக்காக ரூபா 94,168 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

140

## 4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் பொது முயற்சிகளின் வளங்களை ஏனைய அரசாங்க நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக எடுத்தலாகாது என்ற போதிலும் ஆணைக்குழு அதற்கு முரணாக செயற்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) தனியார் போக்குவரத்து சேவை அமைச்சிற்காக 2010 ஆம் ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 2,059,866 கூட்டுமொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மீளாய்வாண்டின் போது இப்பணத்தை மீளளிப்புச் செய்யாமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வரிசை அமைச்சினால் செலவு செய்யப்பட வேண்டிய எனினும் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்த ரூபா 517,925 தொகையான செலவுகள் ஆணைக்குழுவின் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) தனியார் போக்குவரத்து அமைச்சிற்காக ஆணைக்குழுவினால் 05 பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 836,150 கூட்டுமொத்தமான பணம் அதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) போக்குவரத்து அமைச்சிற்காகச் செலவு செய்யப்பட்டு 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய மீதியாகக் காட்டப்பட்ட 1,260,497 தொகை தொடர்பாக உரிய அமைச்சிற்குத் தெரியப்படுத்தி மீளளிப்புச் செய்வதற்கு முடியாததன் காரணமாக 2011 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) 2011 நவம்பர் 28 ஆந் திகதி ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அத்திகதியிலிருந்து தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் திசெம்பர் மாதத்திற்கான சம்பளமாக ரூபா 13,500 ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டிருந்தது.

(139)

4.7 ஆளணி நிர்வாகம்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும் பின்வருமாறாகும்.

| | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 20 | 14 | (6) | - |
| நிறைவேற்றுனர் அல்லாதவர்கள் | 143 | 113 | (32) | 2 |
| ஏனையவர்கள் | 27 | 22 | (5) | - |
| | 190 | 149 | (43) | 2 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அங்கீகரித்த பதவியணிக்குள் உள்ளடக்கப்படாத 02 பதவிகள் தொடர்பாக 08 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகரித்த பதவியணியினரை உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பீடுசெய்யும் போது 43 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களும் இரண்டு உத்தியோகத்தர்களின் மிகைகளும் காணப்பட்டன.

5. கணக்களிப் பொறுப்பும் நல்ஆட்சியும்

5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொதுத் திறைசேரி, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான அத்திட்டம் 2011 யூலை 28 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனத்தின் நிகழ்கால வளங்களும் முன்னைய மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வுகளும் ஒவ்வொரு ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் இலக்குகளும் செயலாற்றல் பிரமாணங்களும் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பகுதிக்குள் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களையும் இலக்குகளையும் தெளிவாக இனங்கண்டு தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் இல்லாததனால் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவினாலும் தயாரிக்கப்படுகின்ற செயல்முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பீடு செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்குள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட புதிய பயணிகள் சேவை உத்தரவுப் பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதுவும் புதிய வீதிகள் எவை என்பதனைத் திட்டமிடலும் அல்லது 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குதலும் இடம்பெற்றிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமுல்படுத்தப்பட்ட போதிலும் தேவையான பதவியினரை அங்கீகரித்தல் இடம்பெற்றிருக்காததனால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகளை உரிய முறையில் பேணுவதற்கு முடியாதிருந்தது.

### 5.4 கணக்காய்வுக் குழு

2011 ஆம் ஆண்டின் போது 12 கணக்காய்வுக் குழு கூட்டங்கள் மாதாந்தம் நடைபெற்றிருந்தும் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் அவதானிப்பாளராக அழைக்கப்பட்டிருந்தார்.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் தலைவருக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப்பட்டன. பின்வரும் அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) மீளாய்வுப் பிரிவும் நடைமுறைப் பரிசோதனைப் பிரிவும்

(ஆ) முற்பணங்களைப் பெற்றுக்கொள்ளலும் தீர்த்துவைத்தல்களும்

(இ) வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்

(ஈ) பயணமுடிவு இடப் பெயர்பலகை ஸ்டிக்கர்களை அச்சிடல்

(உ) புதிய பயணிகள் சேவை உத்தரவுப் பத்திரங்களை வழங்கல்

(ஊ) கணக்கீடு

(எ) உள்ளகக் கணக்காய்வு

(ஏ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஐ) உபாய வழிகளைத் திட்டமிடல்

(ஒ) ஒருங்கிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தல்

எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Nr/Sd*

# <u>தேசிய போக்குவரத்து ஆணைக்குழு</u>

**1971ம் ஆண்டு இல 38 நிதிகூட்டத்தின் பிரிவு 14 (2)(சி)யின் நியதிகளுக்குகமைய 2011 டிசம்பர் 31ம் திகதி முடிவுற்ற ஆணண்டுக்கான கணக்காய்வாளர் அறிக்கைக்கான விடைகள்.**

**2.2.1 உயர்நியமங்களிலான கணக்கீடு.**

அ)

(1)(11)(111)

2011ன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட காசுப் பாய்ச்சல கூற்றுக்களிலான கணக்காய்வு அவதானிப்புக்களின் படி மேற்கொண்ட காசுப் பாய்ச்சல் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் குறைபாடுகளை சீர் செய்வதென அறிக்கையிடப்பட்டது.

ஆ) 2012ம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் வேளையில் முன்னைய ஆண்டுகள் தொடர்பிலான பிற்போடப்பட்ட வருமானங்களை ஒழுங்கமைக்கும் போது பிற்போடப்பட்ட வருமானம் மற்றும் பிற்போடப்பட்ட வருமான ஒதுக்கீடுகள் தொடர்பில் உள்ள தவறுகளை சீர்செய்வதற்கு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

**2.2.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்**

அ) விசாரணையில் குறிப்பிடப்பட்டவாறு 2 கருத்திட்டங்களின் கீழும் சொத்துக்கள் கொள்முதல் செய்யும் வேளையில் அவற்றை பயன்படுத்திக்கொள்ளும் வேளையில் மொத்ததை மிகைப்படுத்தியது இனங்காணப்பட்டதுடன் 2012ம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கும் வேளையில் இது சீர் செய்யப்படும்.

ஆ) 2012ம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கும் வேளையில் சீர்செய்யப்பட்டது.

இ) 2012ம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கும் வேளையில் சீர்செய்யப்பட்டது.

ஈ) விசாரணையில் தெரிவிக்கப்பட்டவாறு 5000,000- அரசாங்கத்தின் 2010 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் பாடசாலைப் பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் விநியோகிக்கும் கருத்திட்டத்திற்கென வழங்கப்பட்டது. கருத்திட்ட செலவினத்தின் ஒரு பகுதி அந்த ஆண்டிலேயே செலவிடப்பட்டதுடன் நிலுவைத்தொகை அந்த ஆண்டு திரண்ட செலவினமாக ஒதுக்கப்பட்டு 2011ம் ஆண்டில் செலவு செய்யப்பட்டது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் ஓராண்டில் நிறைவடைவதில்லை என்பதுடன் தொடர்ந்து செயற்படுத்தப்படுபவையாகும். இவ்விதம் தொடர்ச்சியாகச் செயற்படுத்தப்படும் செயற்றிட்டப் பணிகள் அல்லது செயற்றிட்டச் சேவைகள்

ஆண்டின் இறுதியில் உடனடியாக நிறுத்தப்பட முடியாது என்பதுடன் அடுத்து ஆண்டுக்கான அங்கீகாரம் பெறப்படும் வரை தொடர்ந்து செயன்முறைப்படுத்தப்படல் வேண்டும். இதன் காரணமாகவே வரவு செலவுத் திட்டவரையறை விஞ்சிய சிட்டி லயினர் செயற்றிட்டம் மற்றும் சிசுசெரிய செயற்றிட்டம் தொடர்பிலான செலவினங்கள் அடுத்த ஆண்டுக்கான செயற்றிட்ட செலவினத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

விசாரணையில் குறிப்பிடப்பட்டவாறு 2011ம் ஆண்டு ஜனவரி மாதம் பெஸ்டியன் மாவத்தை பஸ் தரிப்பிடத்தின் மின்சாரக் கட்டணம் செலுத்துவது தொடர்பில் கவனக்குறைவின் காரணமாக செயற்றிட்டச் செலவினம் என பதியப்பட்டுள்ளதெனவும், ஆனால் இச் செலவினம் கழிவறைத் தொகுதியின் பராமரிப்பிற்குப் பொறுப்பாக உள்ள நிறுவனம் ஒன்றினால் செலுத்தித் தீர்க்கப்பட்டது. பின்பு இந்தப் பிழை இனங்காணப்பட்டு குறித்த நிறுவனத்திடமிருந்து பணம் திரும்பப் பெறப்பட்டு செயற்றிட்டக் கணக்குகள் சரிசெய்யப்பட்டன.

இதன்படி விசாரணையில் குறிப்பிடப்பட்டவாறு செயற்றிட்டச் செலவினங்களில் எதுவித குறைகூறல்களும் இடம்பெறவில்லை. பஸ் தொழிற்றுறையை மீளமைத்தல் செயற்றிட்டத்தின் கீழ் செலவினங்கள் குறைத்துக் கூறப்பட்டதுடன் 2012ல் கணக்குகள் தயாரிக்கப்படும் வேளை இவை சீர் செய்யப்படும் என குறித்துவைக்கப்பட்டது.

ஊ) 2011ம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட திரண்ட செலவினம் 2012ம் ஆண்டு செலவிடப்பட்டுள்ளது.

எ) பெஸ்டியன் மாவத்தை பஸ் தரிப்பிடத்திற்கென ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான சம்பளங்களும், படிகளும் மேற்கூறப்பட்ட உதவுனர்களும் ஒருங்கிணைப்பாளர்களும் அனுப்பிவைக்கப்பட்டார்களோ அந்தந்தக் செயற்றிட்டங்களின் கீழ் கணக்கிடப்படட்டுள்ளனர்.

ஏ) 2012ம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கும் வேளையில் சீர்செய்யப்பட்டது.

**2.2.3 நிருவாக கணக்குகள் இணங்கச்செய்யப்படவில்லை.**

பெறவேண்டியதான நிலையான வைப்புக்களிலான வட்டிக்கணக்கு 2012ம் ஆண்டுக்கான கணக்குகள் தயாரிக்கும் வேளையில் சீராக்கம் செய்யப்பட்டது.

விசாரணையில் திரண்ட தேய்மானம் மட்டில் குறிப்பிடப்பட்ட கணக்குகள் நிலுவைகளில் ஒதுக்குகள் சரியானவையே என்பதுடன் பொருத்தமுடைய உப அறிக்கைகள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

### 2.2.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாமை

அ) நடப்பாண்டுக்காலத்தின் போது விற்றுத்தீர்க்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான ஆவணங்கள் இந்நாளளவில் கணக்காய்வுக்காக சமர்பிக்கப்பட்டுள்ளன.

ஆ) கௌரவ தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சருடன் இணைந்து நடாத்தப்பட்ட பஸ் தரிப்பிடங்கள் தொடர்பிலான அவதானிப்புக்கள் தொடர்பில் இத்தேவைக்கென உபயோகிக்கப்பட்ட வாகனங்களுக்கான செலவுகள் 350,551.00 ரூபா ஆகும். பஸ் தரிப்பிடங்களைச் சோதனையிடுவதில் கௌரவ அமைச்சருடன் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளும் பங்குகொண்டனர்.

இ)பெஸ்டியன் மாவத்தை பஸ் தரிப்பிடத்தில் புலனாய்வுக்கென அனுப்பப்பட்ட புலனாய்வு உத்தியோகத்தர்களின் நடமாடும் சோதனை அறிக்கை புலனாய்வு துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 2.2.5 விதிகள் ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

அ) 2005ன் இல 27 இல தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1991 இன் இல 37இலங்கை போக்குவரத்துச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் நியதிகளின்படி மாகாணங்களிற்கிடையிலான பாதையில் ஆணைக்குழுவிடமிருந்து பெற்ற பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வைத்திருத்தல் வேண்டும்.

இதற்கமைய மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 40ன் நியதிகளின்படி இச்சட்டத்தின் ஏற்பாடுகளை எதனையும் மீறும் எந்த ஒரு நபரும் சுருக்கமுறை விசாரணையின் கீழ் நீதவான் ஒருவாரல் குற்றவாளி எனக் காணப்படுமிடத்து 10.000/- மேற்படாத தண்டப்பணமோ அல்லது 10 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைதண்டனையோ அனுபவிக்க வேண்டியவாகின்றார்.

இவ் வகையான தண்டனைகளுக்கான ஏற்பாடுகள் இருந்தபோதும் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுபவர்களுக்கு நீதிபதிகள் குற்றப்பணத்தை மட்டுமே விதிப்பார்கள்.

1991ன் 37இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 39ம் பிரிவின் நியதிகளின் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் தாபிக்கப்பட்ட நடமாடும் சோதனை கூறுகளுக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பிரயாணிகள் போக்குவரத்து அனுமதிபத்திரத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறுபவர்களுக்கெதிராக நடமாடும் சோதனைகளை மேற்கொள்ளலாம்.

இக்காரணங்களுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தங்களை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் மேற்கூறப்பட்ட சட்டத்தில் திருத்தங்களிற்கமைய அனுமதிப்பத்திரங்களின்றி இயங்கும் பஸ் வண்டிகளை ஏற்பாடுகள் உள்ளடக்கப்படும்.

ஆ) 1) நி.பி.371(2)(ஆ)

ை) இந்த முற்பணங்கள் நடமாடும் சோதனைப் பணி, செயற்றிட்டப்பணி மற்றும் தேசத்தின் மகுடக் கண்காட்சிப் பணிகளுக்கெனப் பெறப்பட்டவையாகும். நடமாடும் சோதனைப்பணியில் முழுநேரமும் ஈடுபடுவதனாலும் கருத்திட்டங்களுககான முற்பணங்களைப் பெறும் உத்தியோகத்தர்கள் கொழும்புக்கு வெளியிலும் கடமையில் ஈடுபடுவதனால் முற்பணங்களை இணங்கச்செய்வதில் தாமதம் ஏற்பட்டது.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கெனப் பெறப்பட்ட முற்பணம் கண்காட்சி நிறைவுபெற்றதுடன் இணங்கச்செய்யப்பட்டதே தவிர இந்த முற்பணங்களை தீர்த்துவைப்பதில் எந்தவொரு தாமதமும் இடம்பெறவில்லை. இது தொடர்பாக எதிர்காலத்தில் குறிப்பிட்ட சிலநாட்களுக்குள் தீர்த்துவைக்கப்படுவதில் கவனம் செலுத்தப்படும்.

ைை) இந்த முற்பணங்கள் செலவு மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு பெறப்படுவததெனவும் சில சந்தர்ப்பங்களில் உண்மையான செலவினத்திற்கும் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் இடையில் வித்தியாசங்கள் இடம்பெறுவதுண்டு.

ைைை) இந்த முற்பணங்கள் தேவையில்லை எனக் கணக்குப் பிரிவிற்கு அறிவித்ததன் பின் காசாளர் இத் தொகையை வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்.

11) நி.பி 757(2) (அ)

அளவீட்டுச் சபையின் அறிக்கையின் பிரதி ஒன்று இந்நேரமளவில் கணக்காய்வுக்கெனச் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இ) அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் தாபனப்பணிப்பாளர் தனது 2012.09.19ஆந் திகதி கொண்ட கடிதத்தின் மூலம் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல 29.∴9இன் ஏற்பாடுகளுக்கமைய ஸ்ரீ ஜினரத்தன வாழ்வாதாரக் கைத்தொழில் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆங்கில டிப்ளோமாச் சான்றிதழ் மொழித் தேர்ச்சிக்கான பணக்கொடுப்பனவு ஏற்றுகொள்ளப்பட மாட்டது என அறிவித்திருந்தார். இது தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்புடைய வகையில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈ) செயற்றிட்டத்தின் படி மாதாந்தம் செயல் மதிப்பீட்டு அறிக்கை இணைந்த அமைச்சிற்கு அறிவிக்கப்படுவதுடன் கருத்திட்டங்களின் மாதாந்த முன்னேற்றம் அறிக்கைகளில் தரப்படுகின்றது. 2011ம் ஆண்டுக்கான செயற்றிட்டத்தின் படி செயல் மதிப்பீட்டு அறிக்கைகள் கலாண்டுக்கொருமுறை தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்படுகின்றன. (தேவை ஏற்படின் சமர்பிக்கப்படலாபொது ம்) ஆனால் காலாண்டு அறிக்கைகள் அரச முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கபடவில்லை. எவ்வாறாயினும்

எதிர்காலதில் செயல் மதிப்பீட்டுக் காலாண்டு அறிக்கைகளை அமைச்சிக்கும் அரச பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமரிப்பிப்பதென கவனத்தில் கொள்ளப்பட்டது.

உ) நிறுவனத்திற்கென வாடகைக்கு அமர்த்தப்பட்ட ர்டு-3945 கொண்ட வாகனத்திற்கு அதிலும் பார்க்க கூடிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இணைந்த நேரஅட்டவணைகள் தேசத்திற்கு மகுடம் ஓய்வு அறைகள் மற்றும் கருத்திட்ட நடவடிக்கைகள் என்பன விரைவாகச் செய்து முடிக்கப்பட வேண்டிய காரணத்தாலும் வாகானங்கள் பற்றாக்குறை காணப்பட்டமையாலும் இச்செயற்பாட்டிற்கு மிகை கட்டணம் செலுத்தி பொருத்தமான வாகனம் உபயோகிக்கப்பட வேண்டியதாயிற்று.

ஊ) வாகனச் சொந்தக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் ஒரு ஆண்டின் குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டணத்திற்கு வாகனங்களை வாடகைக்கு விட விரும்புகின்றார்களில்லை. ஆகவே வாகனங்களின் அவசர தேவைக் கருதி எவ்வித ஒப்பதங்களுமின்றி வாகனங்களை வாடகைக்கு அமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

எ) 1) வாகனங்கள் வழங்குனர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர்கள் அதற்கு உடன்படக்கூடிய விதத்தில் சாத்தியப்படவில்லை.

11) 2011ம் ஆண்டில் பஸ் தரிப்பிடப் பலகைகள் அச்சிடுவதற்கான கேள்விப் பத்திரங்களுக்கமைய போட்டோ ஹவுஸ் இன் டிசைன் நிறுவனத்திற்கு 2400 ஒட்டிகள் ஒவ்வொன்றும் ரூபா 325.∴- படி அச்சிடுவதற்கான பொறுப்பு 2011.11.07ஆந் திகதியன்று ஒப்படைக்கப்பட்டது. இந்த 2400 ஒட்டிகளில் 1600 ஒட்டிகள் அச்சிடப்பட்டதுடன் அவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது. எஞ்சிய 800 ஒட்டிகள் வழங்காததால் வழங்குனரின் ரூபா 26000.∴- என்னும் தொகை பிடித்து வைக்கப்பட்டது.இந்தக் கேள்விப் பத்திரம் செயற்பாட்டு பாதுகாப்புக்காக ரூபா 78000.∴- போட்டோ ஹவுஸ் இன்டிசைன்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறப்படவேண்டிய போதும் ரூபா 45,000.∴-மட்டுமே செயல்முறைப் பாதுகாப்பாகப் பெறப்பட்டது. ஆகவே எதிர்காலத்தில் இடம்பெறும் ஒப்பந்தங்களின் பொருத்தமுடைய பண்டங்களுக்கான செயன்முறைப் பாதுகாப்புப் பணமாக 10 வீதத்தை பெற்றுகொள்ளும் முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

111) ஆகக் குறைந்த கூறுவிலையின்படி போட்டோ ஹவுஸ் இன்டிசைன் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பஸ் தரிப்பிடப் பலகைகள் 2400 வழங்கப்படுவதற்கான கட்டடளை ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவர்கள் 1600 ஒட்டிகளை மட்டுமே வழங்கினர். வழங்கப்படாத 800 ஒட்டிகள் குறித்து செயற்பாட்டுப் பாதுகாப்பு தொடர்பாக் ரூபா 26000 பிடித்து வைக்கப்பட்டது. ஒப்பந்தங்களை மீறும் ஒப்பந்தகாரர்கள்.∵வழங்குனர்கள் மேற்சொன்ன வழங்குனர் உட்பட தரவு ஒன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

ஏ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சார்ந்த எல்லா நடவடிக்கைகளும் பொதுமக்கள் உள்ளிட்டவை ஆகும். ஆகவே இந்நிறுவனத்தால் ஆற்றப்படும் பணிகள் எல்லாம்

புதினத்தாள்களில் பிரசுரிக்கப்பட வேண்டும். விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கான திடீர் தீர்மானங்கள் எடுக்கப்படுமிடத்து நிறுவனத்தால் இந்த விளம்பரங்களை புதினத்தாள்களில் நேரடியாகப் பிரசுரிப்பதில் அதாவது மும்மொழிகளிலும் அவை பிரசுரிக்கப்படவேண்டி இருப்பதால் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன.

இப் பிரச்சினைகள் அதாவது நாளிதழ்களிலான விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கென ஒரு முகவர் ஊடாகப் பிரசுரிப்பதன் மூலம் இப்பிரச்சினையை தீர்க்கலாம் என்பதுடன் இதன் தொடர்பிலான கட்டணங்கள் நிறுவனத்தால் நேரடியாகப் பிரசுரிப்பதை விட குறைவானதாகும்.

**4) செயற்படு மீளாய்வு**

**4.1 குறிக்கோள்களுக்கு எதிரான செலவினங்கள்**

அ) தேசத்தின் மகுடக் கண்காட்சி தலைப்பின் கீழ் 2011ஆம் ஆண்டிற்கான பேரேட்டில் ஏனைய செலவினங்களின் கீழ், செயற்றிட்டத்தின் பிரதான குறிக்கோளினை அடைவதிலான செலவினங்களுடன் ஏனைய செலவினங்கள் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்களைக் குறிப்பிட்டுள்ள போதும், துவிச்சக்கர வணடி செயற்றிட்டம் மற்றும் விசேட சேவைகள் என்பன சமூக உதவிச் செயற்றிட்டங்களின் கீழ் செலுத்தப்படும் உதவு தொகைகளுக்கான விசேடமான செயற்றிட்டங்களாகும்.

ஆ) விசாரணையில் குறிப்பிடப்பட்டவாறு செயற்றிட்டங்களுக்கென இனங்காணப்பட்ட மீண்டுவரும் செலவினங்களைக் கணக்கிடும் வேளையில் அரசாங்க மதிப்பீட்டில் அவை பிரதான செயற்றிட்டங்களுக்கென விகிதாசார அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

இ) கௌரவ தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கிடையே இடம்பெற்ற கலநதுரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி நாட்டிற்கான நடைமுறைத்தேவைக்கென ரு 248,889.00 செலவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

அ) 2009 ஆண்டு தொடக்கம் 2011ம் டிசம்பர் மாதம் வரை சிட்டி லைனர் கோச் சேவைக்காக செலவிடப்பட்ட தொகை 36,594,963.00/- ரூபாவுடன் ஒப்பிடுகையில் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாமை தெளிவாகின்றமையால் சிட்டி லைனர் கோச் சேவை 2012 ஏப்ரல் மாதம் 30 திகதியுடன் முடிவுறுத்தப்பட்டது.

ஆ) 12 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கான வீதி அளவையாளர்களை கொண்டு அளவைகளை மேற்கொள்ளாமல், இந்த வீதிகளில் பஸ் வண்டிகள் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் இயக்கப்படும் ஓரிரு பஸ் வண்டிகளிலேயே பயணிகள் பயணமுடிவிடத்தை அடைய வேண்டிய உள்ளதாக குறைகூறப்பட்டது. மேலும் பஸ் இயக்குனர்களின் கேள்வியும் காணப்பட்டது. மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையிடம் இதற்கான சிபாரிசுகள் கேட்கப்பட்டுள்ளதோடு, சிபாரிசுளுக்கமைய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கான விலைமனு கோரல்கள் விடுக்கப்பட்டன.

### 4.3 செயற்பாட்டு திறமையின்மைகள்

அ) 18 (1) போக்குவரத்து ஆணைக்குழுவினால் அல்லது அனுமதியுடைய நபரால் வழங்கப்படும் செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை சட்டதிட்டங்களுக்குப் புறம்பாக பணத்திற்காகவோ அதிகாரப்பூர்வமாகவோ அல்லது வேறு கொடுக்கல் வாங்கலுக்காகவோ பயணிகள் போக்குவரத்திற்கு எந்தவொரு நபராலும் பயன்படுத்தமுடியாது.

(2) இந்த பிரிவின் படி மாகாணங்கள் இரண்டுக்கிடையேயோ அல்லது அதற்கு மேலதிகமான இடங்களுக்கூடாகவோ பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்கும் பொறுப்பு போக்குவரத்து ஆணைக்குழுவிற்குடையதாகும்.

இதன் பிரகாரம் செல்லுப்படியான பிரயாணிகள் அனுமதிப்பத்திரம் இல்லாது மாகாணங்களிடையேயான வீதிகளில் இயக்கப்படும் பஸ் வண்டிகளின் செயல் சட்டத்தின் 40வது பிரிவின் கீழ் குற்றமாகும். சட்டத்தின் ஏற்பாடுகள் எதனையும் மீறும் எந்தவொரு நபரும் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் ஒன்றைப் புரிந்தவராவார் என்பதுடன் நீதவான் ஒருவரால் சுருக்கமுறை விசாரணையில் குற்றத் தீர்ப்பு அளிக்கப்படுமிடத்து அவர் சட்டத்தின் பிரிவு 40(இ) யின் கீழ் தண்டணைக்குட்பட்டவராகிறார்.

இதன் பிரகாரம் மேற்கொள்ள சட்டத்தின் பிரிவுகளில் செல்லுபடியற்ற பிரயாணிகள் அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ் வண்டிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

ஆ) புலனாய்வு உத்தியோகத்தர்களால் புலனாய்வுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களால் பொறுப்பேற்கப்பட்ட ஆவணங்கள்.'.அனுமதிபத்திரங்கள் என்பன மேற்கொண்டு புலனாய்வு செய்யப்படுவதற்கென அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கபடல் வேண்டும். மேலும் வாகனங்கள் புலனாய்வு பணிகளுக்கு உபயோகிக்கப்படும் போதும் திருத்த வேலைகளுக்கென அனுப்பப்படும் போதும் வேறு அவசர வேலைகளுக்கு அந்த வாகனங்களை ஈடுபடுத்தும் போதும் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு புலனாய்வு கடமைகளை செய்யமுடியாதிருக்கும். இதேபோன்று பஸ் வேலைநிறுத்தக் காலத்திலும் புலனாய்வு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த முடியாதிருக்கும். மேலும் நடமாடும் பரிசோதகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விதத்தில் நடமாடும் சோதகர்களின் புதிதாக இணைத்து

கொள்வதற்கான ஆட்சேர்ப்பு பணிகளை மேற்கொள்ளும் படி தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4.4 இணங்காணப்பட்ட நட்டங்கள்

அ) கெமி செரிய கிராமங்களிடையே பயணச் சேவைகளை மேற்பார்வை செய்வதற்கான குழு ஒன்றினை குறிப்பிட்ட கிராமத்தில் தாபிக்கப்பட்டதுடன் இக்குழுக்களில் அப் பிரதேசத்தில் வாழும் மக்களும் இலகுவில் மேற்பார்வை செய்யும் விதத்தில் குறித்த பாதைக்கு அருகிலுள்ளவர்களும் அடங்குவர். கிராமக்குழு சரியான விதத்தில் பஸ் இயக்கப்படுகின்றதென சிபாரிசு செய்த பின் மாகாண போக்குவரத்து அதிகாரியால் சிபாரிசு செய்யப்பட்டு வழங்கப்படும் அறிக்கைக்கு நாள்தோறும் பணக்கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.

நடமாடும் சோதகர்களால் முறை மாற்று முறையில் நாள்தோறும் மேற்பார்வை செய்யும் கடமையைச் செய்ய முடியாது என்பதால் இந்தப் பொறுப்பு கிராமக்குழுவுக்கும் மாகாண போக்குவரத்து அதிகார சபைக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

போதியளவு எண்ணிக்கை கொண்ட மேற்பார்வை உத்தியோகத்தர்கள் இல்லாததாலும் வாகானப் பற்றாக்குறையாலும் தொடர்ந்து இச் சேவையை நடாத்துவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்நாளலவில் பல கெமி செரிய பஸ்களுக்கு ஜீபீஎஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் மூலமாக பெறப்படும் தகவல்களின் உதவியுடன் கெமி செரிய பஸ்களை மேற்பார்வை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பிரகாரம் முறையாக நிரப்பப்பட்ட சம்பவத்தாள்களுக்குப் பணக்கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதுடன் பஸ் சேவைகள் தொடர்பில் முறைபாடுகள் கிடைக்கப்பெற்றவிடத்தும் நடமாடும் சோதனை அறிக்கைகளுக்குகமைய பஸ் வண்டிகள் இயக்கப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைக்கபெற்றவிடத்தும் பொருத்தமுடைய சேவைகளுக்கான பணக்கொடுபப்னவுகள் இடைநிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே நிறுவனத்துக்கு நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறமுடியாது.

ஆ) 2011.06.07 ஆந் திகதியன்று இல 14 கேள்விப்பத்தரத்தின் கீழ் 03 பாதைகளில் 04 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டன. உயர் விலைக்கோரிக்கையை சமர்ப்பிப்பதற்கு கேள்விப்பத்திரதாரருக்கு கேள்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தவேளையில் இரண்டாவது உயர்விலை கோரிக்கையாளரிடம் இருந்து தனக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாக முதலாவது உயர் விலை மனுதாரர் கூறியதால் ஒரு குழப்பநிலை ஏற்பட்டது. ஆகவே இம் மிரட்டல்

காரணமாக முதல் மனுதாரர் கேள்விக்கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்ட நிலையில் மிரட்டல் விடுத்தமையால் இரண்டாவது மனுதாரருக்கு கேள்விக் கோரிக்கையை வழங்கமுடியாது. இது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து இந்தக்கேள்விப் பத்திரத்தை தள்ளுபடி செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

### 4.5 செயற்றிட்டங்களை செயன்முறைப்படுத்துவதில் தாமதங்கள்

அ) 2011ம் ஆண்டளவில் இணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்து செயன்முறைப்படுத்துவதில் இடையூறுகளும் கட்டுப்பாடுகளும் இருந்தபோதும் 240 பஸ் சேவைகள் தொடர்பிலான நேர அட்டவணைகள் செயன்முறைபடுத்தப்பட்டன. இது 2011ல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட மொத்தம் 406 மாகாணங்களுக்கிடையிலான சேவைகளின் மட்டில் 59.9மூ நூற்று வீதமாகும்.

2011ம் ஆண்டில் டீசலின் விலை அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பஸ் உரிமையாளர்கள் பஸ் கட்டணத்தை அதிகரிக்கும் படி கோரியிருந்தனர். எனினும் கௌரவ தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் பஸ் உரிமையாளர்களினால் மேலதிகமாக செலவிடப்படும் செலவினங்களைத் தற்காலிகமாக நிறுத்தக்கோரி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அறிவுருத்தியிருந்தார்.

ஆ) ஜீபீஎஸ் கருவிகளைப் பொருத்துவதில் தாமதம் ஏற்பட்டது. ஆகவே பணி ஒப்படைக்கப்பட்ட அந்தக் கம்பனியால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடையமுடியவில்லை. எனவே அந்நேரத்தில் வட மாகாணத்தில் ஜீபீஎஸ் கருவிகளைப் பொருத்தும் பணிகளின் முன்னேற்றம் மிகவும் மந்த கதியிலேயே காணப்பட்டது. ஆனால் தற்போது வட பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் எய்தப்பட்டுள்ளது.

ஜீபீஎஸ் தொழில் நுட்பத்தை உபயோகிக்கும் பஸ்களில் புலனாய்வை நடாத்துவதன் குறிக்கோள் தரம் வாய்ந்த ஒழுங்கமைப்பு நடைமுறையை பயன்படுத்தும் அதே வேளை இந்த சீரான முறையில் நடாத்துவதாயின் இதற்கென பிரத்தியேகக் கட்டுப்பாட்டு அறையொன்றை நிர்மாணிப்பதற்கான அவசியம் எழுந்ததை தொடர்ந்து கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் கட்டுப்பாட்டு அறை அமைப்பதற்கான பணி தொடங்கப்பட்டது. ஆனால் பணி நிறைவு பெறவில்லை. அதனால் அக் காலப்பகுதியில் மேற்பார்வை பணிகள் கட்டுப்பாட்டு அறையின்றியே நடாத்தப்பட்டது. எனினும் கட்டுப்பாட்டு அறையின்றி மேற்பார்வை பணியை செம்மையாக செய்யமுடியாதநிலை காணப்பட்டதுடன் போதியளவு ஊழியர்கள் காணப்படாமையினாலும் மேற்பார்வை பணிகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

கணக்காய்வு மேற்கொள்ளும் வேளையில் இது நிகழ்ந்துள்ளதாயினும் இப்போது கட்டுப்பாட்டறையும் கருவிகளும் தாபிக்கப்பட்டதனால் கிடைக்கக்கூடிய பதவியினருடன் மேற்பார்வைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச் சந்தர்ப்பத்தில் பின்வரும் குறிப்பிட்ட உதாரணங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- அதியுயர் வேகத்தில் பயணிக்கும் பஸ் வண்டிக்கு அதன் வேகத்தை குறைத்து கொள்ளக் கோரி வண்டிக்குள் ஒரு எச்சரிக்கை மணி தானாகவே ஒலிக்கும். அப்போது பஸ் வண்டியின் வேகம் தானாகவே கட்டுப்படுத்தப்படும்.

- அதிவேகப் பாதையில் இயக்கப்படுகின்ற பஸ் வண்டிகளின் பயணங்கள் தொடர்பான விபரங்களை பேணுதல்.

- அதிவேகத்தில் இடரைப பொருட்படுத்தாது செலுத்தப்படும் வாகனங்கள் இனங்காணப்பட்டு தொலைபேசி வாயிலான செய்திகள் மூலம் எச்சரிக்கைகள் வழங்கப்படும்.

- செயற்பாடு தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள்

உதாராணம்- கொழும்பு-தெரங்கல பாதையிலான செயற்பாடுகள்

- பிரயாணிகளின் முறைப்பாடுகள் மற்றும் பஸ் செயற்பாட்டாளர்களின் முறைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு உபயோகித்தல்.

உதாரணம்- கொழும்பு – நந்திக்கடல் மற்றும் தங்காலை - முல்லைத்தீவு பஸ் சேவைகள்

- இத் தொழில் நுட்பம் பொருத்தப்பட்ட பஸ்கள் தொடர்பில் பொதுமக்கள் தகவல்களைக் கோரும் போது வேண்டிய அனைத்து தகவல்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

உதாரணம்- அதிவேக போக்குவரத்து பாதைகளில் இயக்கப்படும் பஸ் வண்டிகள் தொடர்பிலான செயற்பாட்டுத் தகவல்களை வழங்குதல்.

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் செய்யப்பட்ட கோரிக்கையின் பேரில் முன்னோடிக் கருத்திட்டம் நடைமுறையில் இருக்கும் சில மாதாங்களுக்கு மட்டும் இந்தக் கருவிகளை எதுவித கட்டணமும் இன்றி இலவசமாக வழங்குதென ஒப்புகொள்ளப்பட்டது. கம்பனிகளில் குறிப்பிட்ட இக் கம்பனி ஆரம்பக்கட்டத்திலேயே இருந்தது. அத்துடன் குறித்த கம்பனி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சில பஸ்களில் கட்டணம் எதுவுமின்றி ஜீபீஸ் கருவிகளை பொருத்தி இதன் முக்கியத்துவத்தை விளக்கப்படுத்தியது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின்

சார்பில் அந்த நாட்களில் பொருட்காட்சிக்கான நுழைவு எதுவித கட்டணமும் அறவிடப்படாது நடாத்தப்பட்டது.

- ஒரு ஊக்குவிப்பாகக் கொண்ட தேவையான உதிரிப்பாகங்களை இறக்குமதி செயதலைத் தமது குறிக்கோளாயிருந்த உள்ளூர் உற்பத்திகளுக்கு அதை உள்ளூர்க் கண்டுப்பிடிப்பாக ஒன்றிணைப்பதாகும்.

- ஐ.சி.டி.ஏ நிறுவனம் மேற்குறித்த நிறுவனத்தை ஒரு சிறந்த நிறுவனமாக சிபாரிசு செய்தது.

- மேற்கூறிய கருவிகள் எமது தேவைக்கெனவே விசேடமாக உற்பத்தி செய்யப்பட்டன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுப் பணிப்பாளர் சபை இந்தக் கருவிகளை முன்னோடித் திட்டத்தின் போது கட்டணம் எதுவும்மில்லாமல் பொருத்தியதுடன் அந்த நிறுவனத்திடமிருந்து மட்டுமே பொருத்தமுடைய பண்டங்களை கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேற்கூறிய கருவிகளில் சில குறைப்பாடுகள் இருந்தன. குறித்த நிறுவனத்தின் ஊடாக அவற்றைச் சீரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந் நேரமளவில் பிரதான பிரச்சினை என்னவெனில் மேற்கூறிய நிறுவனம் குறித்த துறையிலிருந்து விலகியுள்ளது. ஆகவே ஜீபீஸ் கருவிகளை வழங்கும் ஒரு நிறுவனத்தின் மூலமாகச் ஜீபீஸ் கருவிகளை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 4.6. ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மூலவளங்கள்.

அ) கணக்காய்வு விசாரணையின் படி தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சிடம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செலவிடப்பட்ட தொகையை பதிலீடு செய்யும்படி கேட்கப்பட்டது. ஆனால் 2011 ஆண்டின் இறுதிவரை மேற்கூறிய பணத்தை பதிலீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு என்பன 28.02.2013ம் திகதியன்று கூட்டத்தின் போது எடுத்த தீர்மானத்தின் படி இந்த நிலுவைப்பணம் 2011ம் ஆண்டுக்கான கணக்குகளில் பதிவழிக்கப்பட்டது.

ஆ) கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டவாறு ஆணைக்குழுவினால் இக்கருத்திட்டங்களின் கீழ் செயன் முறைப்படுத்ததன் தொடர்பில் 517,925.∴- ரூபா செலவிடபபட்டுள்ளது. இச் செலவுகள் ஒவ்வொரு கருத்திட்டங்களிலும் நேரடியான தொடர்புடையவையாகும்.

இ) தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு தனியான ஒரு புதிய அமைச்சாகத் தாபிக்கப்பட்டு சரியான அலுவலக இடவசதி வழங்கப்படும் வரை இந்த அமைச்சின் கடமைகள் யாவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வளாதத்திலேயே நடாத்தப்பட்டது.

இக்காலப்பகுதியில் நிதி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் அமைச்சுகளால் பெற்றுக்கொள்ளபடவில்லை. அமைச்சினால் பிரசுரிக்கப்பட வேண்டிய சில விளம்பரங்கள் ஆணைக்குழுவினால் பிரசுரிக்ககப்பட வேண்டியதாயிற்று. இதற்கான செலவைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவே ஏற்கவேண்டியதாயிற்று.

ஈ) கணக்காய்வு விசாரணையின் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் செலவிடப்பட்ட பணத்தை மீளளிப்புச் செய்யும்படி போக்குவரத்து அமைச்சிக்கு மதியுரை வழங்கப்பட்டது. ஆனால் 2011ம் ஆண்டின் இறுதி வரை போக்குவரத்து அமைச்சினால் இப்பணம் மீளளிப்புச் செய்யப்படவில்லை. ஆகவே 2012.02.28 அன்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் படி இந் நிலுவை 2011ம் ஆண்டுக்கணக்கிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டது.

உ) திரு. வை.கே.எம்.நிசாந்த அபேநயாக்க 2011.11.28 தொடர்க்கம் பெஸ்டியன் மாவத்தை தரிப்பிடத்தில் பஸ் இயக்கங்களுக்கான ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார். தனியார் போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் திரு. வை.கே.எம்.நிசாந்த அபேநயாக்க கௌரவ அமைச்சரின் அலுவலகத்தில் சேவையாற்றுவதற்கு விடுவிக்கப்பட்டார். அவர் அமைச்சில் சேவையாற்றிய அதே வேளை பெஸ்டியன் மாவத்தையிலும் சேவையாற்ற வந்துள்ளார். அவரது நியமனம் 2011.11.28 தொடக்கம் ஆறு மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

அவருக்கு நாளொன்றுக்கு 750.∴-வீதம் (ஆகக் கூடியது) 20 நாட்களுக்கு 13,500.∴- ஏற்பாட்டு நிதியத்துக்கு 10 வீதம் கழிக்கப்பட்ட பின் செலுத்தப்பட்டது.
திரு வை.கே.எம்.நிசாந்த அபேநயாக்கவின் ஆறு மாதகாலம் 2012 மே 28ஆந் திகதியுடன் முடிவுற்றது.

## 4.7 பணிக்குழாத்தினர் நிர்வாகம்

தற்போது பெஸ்டியன் மாவத்தை பஸ் தரிப்பிடத்திலுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தில் கடமை ஆற்றுவதற்கு அங்கீகரிக்கப்பெற்ற ஆளணியினர் இல்லை. ஆளணியினரை இணைத்துக்கொள்வதற்கான அங்கீகாரம் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.

அங்கீகாரம் கிடைக்கும் வரையிலும் இந்த அலுவலகத்தின் கடமைகளைத் திறம்படச் செய்வதற்கென கடமைகளில் உரிமை மாற்றம் செய்யப்பட்டு இந்த உத்தியோகதத்தர்களைக் கடமைக்கு விடுவிப்பதற்கான அங்கிகாரம் வழங்கப்பட்டது.

இந்த உத்தியோகத்தர்கள் முன்பு பெஸ்டியன் மாவத்தையில் ஆலோசகர்களாகச் சேவையாற்றுவதற்கு இணைக்கப்பட்டிருந்த அதே வேளை தற்போது எந்தவொரு ஆலோசகரும் இவ்வலுவலகத்தில் இணைக்கப்படவில்லை.

**கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி**

**5.1 இணைத்திட்டம்.**

அ) 2011-2015 இணைந்த திட்டம் தொடர்பில் இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது (செயல்திட்டம் உட்பட) அங்கீகரிக்கப்பட்ட அதே வேளை குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு இதை கொண்டு செல்வதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டது. இதன் படி குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு இந்த அறிக்கைகளை அறிவிப்பதற்கான நடவடிக்கைக எடுக்கப்பட்டது. அதாவது இணை அமைச்சு, கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம், அரச பொது முயற்சிகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு இந்த அறிக்கைகள் அனுப்பப்பட்டதற்கான எழுத்து மூலமான சான்றுகள் எதுவுமில்லை. 2011.07.28 திகதியிடப்பட்ட கடிதத்தின்படி குறிப்பிட்ட அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (கடிதத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

இதே போன்று 2012-2016 இற்கான இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு 2011ம்-12-01ஆந் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக்கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டதுடன் இது இணை அமைச்சு, கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் மற்றும் அரச பொது முயற்சிகள் திணைக்களம் என்பனவற்றுக்கு 09-12-2011 ம் திகதியிடப்பட்ட கடிதத்தினால் அனுப்பிவைக்கப்பட்டது.

ஆ) 2013-2017 இற்கான இணைந்த திட்டத்தினை தயாரிக்கும் வேளையில் முன்னைய மூன்று ஆண்டுகளுக்குமான செயல் மதிப்பீட்டு அளவுக்கோல் மற்றும் மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வையும் மேற்கொள்ள வேண்டுமெனக் கவனத்திற் கொள்ளப்பட்டது.

இ) அது அவ்விதம் குறிப்பிடப்பட்டதற்கான காரணம் சில சமூக முக்கியம் வாய்ந்த செயற்றிட்ட நடவடிக்கைகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தொடர்ந்தும் செயன்முறைப்படுத்தப்படுவதினால் ஆகும். ஆனால் மாதந்தோறும் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போது எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு இலக்குகளை எய்துவது தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு செயலாளரின் வழிகாட்டலின் கீழ் கலந்துரையாடப்பட்டது.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஆண்டில் செயல் திட்டத்தில் எதிர்பார்த்த செயலாற்றல் இலக்கைச் சேர்த்துகொள்வதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

ஈ)மேலே (அ)(ஆ) மற்றும் (இ)ன் கீழ் பதிலளிக்கப்பட்டது.

### 5.2 செயல் திட்டம்

அ) எதிர்வரும் ஆண்டில் எதிர்பார்த்த செயலாற்றல் இலககுகளைச் சேர்த்துக்கொள்வதெனக் கவனம் செலுத்தப்பட்டது.

ஆ) வழங்கப்படவுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் புதிய வீதிகள் என்பன பிரயாணிகளின் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அளவீட்டுத் தரவுகள், மற்றும் புதிய பாதைகள் அமைக்கப்படுகின்றமையை கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. போதியளவு வீதி பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் இன்றுள்ள வீதி வலையமைப்புக்களுக்கமைய வழங்கப்பட்டுள்ளன. ஆண்டுக்காலத்தின் போது வழங்கப்பட்ட புதிய வீதி அனுமதிப்பத்திரங்கள் மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் இத் தீர்மானங்கள் பொருத்தமான சந்தர்ப்பத்திற்கேற்ப எடுக்கப்படுவதால் அவற்றைச் செயலாற்றல் திட்டத்தில் குறிப்பிடுவது கடினமாகும்.

இ) பொது விதிப்படி திரட்டப்பட்டத் தரவு 2011ம் ஆண்டுக்கான செயல்திட்டத்துக்கு அமைவாக முன்னேற்றம் பற்றியதான மீளாய்வைச் செய்வதற்கு உதவும் வகையில் போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கபட்டுள்ளது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

இது வரை உள்ளகக் கணக்காய்வுக் கிளைக்கான பதவியணியினருக்கான அங்கீகாரம் பெறப்படவில்லை. ஆனால் தற்போதைக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகர்களால் உள்ளகக் கணக்காய்வு நடடிக்கைகளைச் செய்வித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல 20ன் ஏற்பாடுகளுக்கமைய தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குத் தேவையான பதவியணியினருக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இப்போது பதவியுயர்வு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் உள்ளகக் கணக்காய்வுக் கிளைக்கு ஒரு குறிப்பிட்ட விதத்திலான பதவியணியினரின் தேவையை ஆராய்வதற்கும் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்தற்குமான வழிமுறைகள் தயாரிக்கப்படுகின்றன.

### 5.4 கணக்காய்வுக் குழுக்கள்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும் அவதானிப்பதற்குமான மதியுரையும் அவதானிப்புகளும் தேவைப்படும் பட்சத்தில் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திலிருந்து ஒரு பிரதிநிதியைப் பெற்றுகொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2011ம் ஆண்டில் ஒரு பிரதிநிதி அவதானிப்பாளராக ஒரேயொரு கூட்டத்தில் மாத்திரம் பங்கேற்றார். அத்துடன் 2012ம் ஆண்டில் இது வரை கணக்காய்வாளர் அதிபதி அலுவலகத்திலிருந்து ஒரு பிரதிநிதி வரவழைக்கப்பட்டு 03 கூட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

அடுத்த வரவு செலவு திட்டமதிப்பீட்டைத் தயாரிக்கும் வேளையில் வேறுபாடுகளைக் குறைப்பதற்குத் தேவையான நடைமுறைகளை எடுக்கவேண்டுமென்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

### 5.5 வரவுச்செலவு திட்டம்

எதிர்வரும் வரவு செலவுதிட்டத் தயாரிப்பின் போது குறைபாடுகள் ஏற்படுவதை இழிவளவாக்கப்படுதற்கான நடவடிக்கைகள் எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

## 06.முறைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வு விசாரணையில் தெரிவிக்கப்பட்ட துறைகளுக்கு விசேட கவனம் செலுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது

தலைவர்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு